Registered as a Newspaper

பக்கங்கள் – 12

விலை – ரூபா 50

# உதயன்

சுடர் : 39
கதிர் : 239

திங்கட்கிழமை
22 ஜூலை 2024

ஆடி 06 ஆம் நாள்
வள்ளுவர் ஆண்டு 2055


முச்சந்தி முரளி



"கலிகாலத்தில கடவுளிட்டையே களவெடுக்கத் தொடங்கிட்டினம் பாருங்கோ"



# தேர்தலுக்கான கூட்டு அல்ல தேசத்துக்கான கூட்டமைப்பாவோம்!

## கட்சித் தலைவர்களுக்கு சி.சிறீதரன் அறைகூவல்

யாழ்ப்பாணம், ஜூலை 22

பொது எதிரியை எதிர்கொள்வதற்காக எமக்குள் உள்ள எதிர்ப்புணர்வுகளைப் புறம்தள்ளி, தனிப்பட்ட நலன்களை முன்னிறுத்தாது இன நலன்களை முன்னிறுத்தும் ஒரு கூட்டுத் தலைமையின் உருவாக்கம் குறித்து சிந்திப்பதோடு, தமிழ்த் தேசியத் தளத்தில் இயங்கும் ஒவ்வொரு கட்சிகளினதும் மரபார்ந்த தனித்துவங்களைப் பேணியவாறு, தேர்தல் கூட்டாக அன்றி தேசத்தின் கூட்டாக, கூட்டமைப்பை மீள உருவாக்குவதற்கு தமிழ்த் தேசியத் தலைவர்கள் ஒவ்வொருவரும் ஒத்துழைக்கவேண்டும் என நாடாளுமன்ற உறுப்பினர் சிவஞானம் சிறீதரன் அழைப்பு விடுத்துள்ளார்.

11

சிங்கள வேட்பாளர்

## தருவதாகச் சொல்வார்கள் ஆனால் தரமாட்டார்கள்

### தமிழ்ப் பொதுவேட்பாளரே ஒரே தெரிவு என்று தேசிய மாநாட்டில் விக்கி உரை

யாழ்ப்பாணம், ஜூலை 22

சிங்கள வேட்பாளர்கள் தருவதாகச் சொல்வார்கள். ஆனால் அவர்கள் தரமாட்டார்கள். அவர்கள் கொடுப்பதற்கும் பிக்குகள் விடமாட்டார்கள். தமிழ்ப் பொதுவேட்பாளரே

08

## ரணில் போட்டியிட வேண்டும்

### பொதுக் கூட்டத்தில் இப்படியொரு பரப்புரை

கொழும்பு, ஜூலை 22

ஜனாதிபதித் தேர்தலில் ரணில் விக்கிரமசிங்க போட்டியிட வேண்டும் என வலியுறுத்தி கம்பஹா, கடவத்தையில் நேற்று நடைபெற்ற கூட்டத்தில்

10



ஊர்காவற்றுறை

## ஆலய நகைகள் திருட்டு: உதவிக் குருக்கள் கைது

### நகை, பணம் மீட்பு

11

## வெளிநாட்டு மோசடியால் ரூ. 75 லட்சம் பறிபோனது

யாழ்ப்பாணம், ஜூலை 22

வெளிநாட்டுக்கு அனுப்புவதாகத் தெரிவித்தவர்களிடம் 75 இலட்சம் ரூபா கொடுத்து ஏமாந்தவர்கள் வழங்கிய முறைப்பாடுகளுக்கு அமைவாக சந்தேகத்தில் 3 பேர் கைது செய்யப்பட்டுள்ளனர்.

08

## 22ஆவது திருத்தம் சபைக்கு எப்போது?

கொழும்பு, ஜூலை 22

அரசமைப்பின் 22 ஆவது திருத்தச்சட்ட வரைவு அடுத்த நாடாளுமன்ற கூட்டத்தொடரின் போது முன்வைக்கப்படமாட்டாதென சபை முதல்வரும், அமைச்சருமான சுசில் பிரேமஜயந்த தெரிவித்தார்.

இது தொடர்பில் 11

## விசேட சந்திப்பு

கொழும்பு, ஜூலை 22

தேர்தல் ஆணைக்குழுவின் உறுப்பினர்களுக்கிடையிலான விசேட சந்திப்பொன்று நாளைமறுதினம் புதன்கிழமை நடைபெறவுள்ளது. இச்சந்திப்பின் பின்னரே ஜனாதிபதித் தேர்தலுக்

10

## ஜனாதிபதித் தேர்தல் செப்ரெம்பர் 21?

கொழும்பு, ஜூலை 22

ஜனாதிபதித் தேர்தல் செப்ரெம்பர் 21 ஆம் திகதி நடைபெறக்கூடும் என்றும் எதிர்வரும் ஓகஸ்ட் 15 முதல் 20 ஆம் திகதிவரை வேட்புமனுக்கள் ஏற்கப்படும் எனவும் தெரியவருகின்றது.

10

## பரபரப்புக்கு மத்தியில் நாளை நாடாளுமன்றம்!

கொழும்பு, ஜூலை 22

ஜனாதிபதித் தேர்தலுக்கான திகதி இவ்வாரம் அறிவிக்கப்படவுள்ள நிலையில், பெரும் அரசியல் பரபரப்புக்கு மத்தியில் நாடாளுமன்றம் நாளை 23ஆம் திகதி

10

## சட்டப்படி வேலை

கொழும்பு, ஜூலை 22

அதிபர், ஆசிரியர்களின் சம்பள முரண்பாடுகளைத் தீர்க்குமாறு வலியுறுத்தி ஆசிரியர், அதிபர், தொழிற்சங்கங்கள் இன்று திங்கட்கிழமை முதல் தொடர்ச்சியாக

10

வீடு புகுந்து

## மோதிரம் அபகரித்தோர் பொலிஸிடம் சிக்கினர்!

யாழ்ப்பாணம், ஜூலை 22

வீட்டுக்குள் புகுந்து வயோதிபரின் மோதிரத்தை அபகரித்துச் சென்ற குற்றச்சாட்டில் இரு இளைஞர்கள் மானிப்பாய் பொலிஸாரால் நேற்றுமுன்தினம் சனிக்கிழமை கைது செய்யப்பட்டுள்ளனர்.

கடந்த வெள்ளிக்கிழமை நவாலியில், வீட்டார் வெளியில் சென்றிருந்த நிலையில் 64 வயதானவர் மாத்திரம் தனித்திருந்துள்ளார். வீடு புகுந்த இரு இளைஞர்கள்,

11

## சாவகச்சேரி மருத்துவமனைக்குள் மூக்கை நுழைத்தார் டக்ளஸ்

யாழ்ப்பாணம், ஜூலை 22

சாவகச்சேரி மருத்துவமனை தொடர்பான விவகாரங்கள் சற்று ஓய்ந்திருந்த நிலையில் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா நேற்றைய தினம் அங்கு பயணம் செய்து திடுதிடுப்பென 15 அங்கத்தவர் உள்ளடங்கிய அபிவிருத்திக் குழுவைத் தெரிவு செய்யுமாறு பணித்துள்ளார் என்று

11

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# வாக்குச்சீட்டு அச்சிடும் பணி; பலப்படுத்தப்படும் பாதுகாப்பு

**கொழும்பு, ஜூலை 22**

**ஜனாதிபதித் தேர்தலுக்கான வாக்குச்சீட்டுகள் அச்சிடும் பணியின்போது அரச அச்சகத்துக்கு அதிக பாதுகாப்பை வழங்குவது தொடர்பில் அரசாங்கம் கவனம் செலுத்தியுள்ளது.**

அதன்படி, கடந்த 2019 ஆம் ஆண்டு ஜனாதிபதித் தேர்தலில் வாக்குச்சீட்டுகள் அச்சடிக்கும்போது அரச அச்சகத்துக்கு வழங்கப்பட்ட பாதுகாப்பை விட இம்முறை அதிகளவு பாதுகாப்பை வழங்கத் திட்டமிடப்பட்டுள்ளது.

அரச அச்சக வளாகத்தில் இரவு பகலாக 65 பொலிஸ் அதிகாரிகளை பணியில் ஈடுபடுத்தத் திட்டமிடப்பட்டுள்ளது.

ஜனாதிபதித் தேர்தல் தொடர்பான 300 க்கும் மேற்பட்ட வேலைகள் அரச அச்சகத்துக்கு ஒதுக்கப்பட்டுள்ள நிலையில், அச்சகத்தின் வெளிப்புறப் பாதுகாப்பையும் பலப்படுத்தத் திட்டமிடப்பட்டுள்ளது.

ஜனாதிபதித் தேர்தல் தொடர்பான மக்கள் தொகை கணக்கெடுப்பு படிவங்கள் இந்த நாளகளில் அச்சிடப்படும் எனவும், தேர்தல் திகதி அறிவிக்கப்பட்ட நாளில் இருந்து ஏனைய அச்சுப்பணிகள் ஆரம்பிக்கப்படும் என்றும் அரச அச்சக அலுவலகம் தெரிவித்துள்ளது. (ச-இ)



# தம்மிக்க வேண்டாம் வலுக்கிறது எதிர்ப்பு

கொழும்பு, ஜூலை 22

ஜனாதிபதித் தேர்தலில் தம்மிக்க பெரேராவுக்கு ஆதரவு வழங்குவது தொடர்பில் ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனக் கட்சி எந்தவொரு முடிவையும் எடுக்கவில்லை என்று அந்தக் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர் மஹிந்தானந்த அளுத்கமகே தெரிவித்துள்ளார்.

மொட்டுக் கட்சியில் களமிறங்க தம்மிக்க பெரேராவுக்கு தகைமைகள் இல்லை. அவரைக் களமிறக்கும் முடிவை கட்சி இன்னும் எடுக்கவில்லை.

பொருளாதார நெருக்கடியில் இருந்து நாட்டை மீட்கவேண்டும் என்பது மட்டுமே எமது நோக்கம். பொதுவேட்பாளராக, பொதுக் கூட்டணியிலேயே ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க போட்டியிடுவார். ஜனாதிபதி ரணிலை ஆதரிக்கும் முடிவையே மொட்டுக் கட்சி எடுக்கும் என நம்புகின்றேன் என்றும் அவர் குறிப்பிட்டார். (ச-இ)

# ரணிலின் முயற்சி புஸ்வாணமே

கொழும்பு, ஜூலை 22

அரசாங்கத்தால் 22ஆவது திருத்தத்தை மேற்கொள்ளும் நோக்குடன் முன்னெடுக்கப்படும் முயற்சியானது புஸ்வாணமாகும் என்று தேசிய மக்கள் சக்தி தெரிவித்துள்ளது.

இதுதொடர்பில் அதன் நாடாளுமன்ற உறுப்பினர் விஜித ஹேரத் தெரிவிக்கையில்;

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவுக்கு தேர்தல் தொடர்பில் அச்சமான மனோநிலை காணப்படுகிறது. அதனால் தேர்தலைத் தாமதப்படுத்துவதற்கு நடவடிக்கைளை முன்னெடுக்கிறார்.

22 ஆவது திருத்தச்சட்டவரைவை நிறைவேற்ற நாடாளுமன்றத்தில் மூன்றிலிரண்டு பெரும்பான்மை இல்லை. எதிர்க்கட்சிகள் தற்போதைய நிலையில் அரசமைப்புத் திருத்தத்தை மேற்கொள்வதற்கு ஆதரவளிக்கும் நிலைமையில் இல்லை- என்றார். (ச-இ)



# ரணிலின் '22' அரசியல் நகர்வா?

ரணில் விக்கிரமசிங்க 22ஆம் அரசமைப்புத் திருத்தத்தை வெளியிட்டதன் பின்னர் அரசியல் அரங்கில் பெரும் கேள்வி நிலைகள் தோன்றியுள்ளன.

இந்த நடைமுறையானது ராஜபக்சக்களுக்கும் ஜனாதிபதிக்கும் இடையிலான பிளவை விரிவுபடுத்தும் சாத்தியம் உள்ளது என்று அரசியல் ஆய்வாளர்கள் கணித்துள்ளனர்.

ரணில் விக்கிரமசிங்க ஜனாதிபதியாகவுள்ள தற்போதைய அமைச்சரவையில் ராஜபக்சக்கள் அங்கம் வகிக்கின்றனர். எனினும் அவர்களின் தேர்தல் தொடர்பான நிலைப்பாடானது தற்போது வெளிப்படையான அரசியல் மோதலுக்கு இட்டுச் சென்றுள்ளது. ரணில் விக்கிரமசிங்க 22ஆவது அரசமைப்புத்திருத்தத்தை வெளியிட்டமையானது அவரது அதிகாரத்தை நிலை நிறுத்துவதற்கான ஒரு மூலோபாய நடவடிக்கையாகப் பார்க்கப்படலாம்.

ராஜபக்சக்களின் அரசியல் அபிலாஷைகளைக் குறைமதிப்புக்கு உட்படுத்தும், சர்ச்சைக்குரிய மற்றும் கணிக்க முடியாத தேர்தல் நகர்வுக்கு களம் அமைக்கும் என்றும் அவர்கள் மேலும் குறிப்பிட்டுள்ளனர். (ச-இ)

# தனிவழியில் பெரமுன?

கொழும்பு, ஜூலை 22

ஜனாதிபதி வேட்பாளர் விடயத்தில் முரண்பாடுகள் தீர்க்கப்படாத நிலையில் ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுன தனித்து வேட்பாளர் ஒருவரை நிறுத்துவதற்கான பேச்சு ஆரம்பிக்கப்பட்டுள்ளதாகத் தெரியவருகிறது.

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவுக்கு ஆதரவளிக்க வேண்டுமாயின், மொட்டுச் சின்னத்தில் போட்டியிடவேண்டும் என்பது நிபந்தனையாக உள்ளது.


ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவுக்கு இதில் உடன்பாடு இல்லை. இந்தப் பின்னணியிலேயே தனித்து வேட்பாளரை நிறுத்துவதனால் ஏற்படக்கூடிய நிலைமைகள் குறித்து ஆராயப்படுவதாகத் தெரியவருகிறது. (ச-இ)

# பொன்சேகாவின் அறிவிப்பு ஓகஸ்ட்டில்

சரத் பொன்சேகா எதிர்வரும் ஓகஸ்ட் மாத முற்பகுதியில் ஜனாதிபதி வேட்பாளராகப் போட்டியிடவுள்ளதான அறிவிப்பை வெளியிடவுள்ளார் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. இது தொடர்பான உத்தியோகபூர்வ அறிவிப்பு ஓகஸ்ட் 7 மற்றும் 9 ஆம் திகதிக்கு இடையில் வெளியிடப்படும். பொன்சேகா கட்சி சாராத சுயேச்சை வேட்பாளராகப் போட்டியிடுவார் என்றும் தெரிவிக்கப்படுகிறது. (ச-இ)

## 5 ஆம் ஆண்டு நினைவஞ்சலி

தாயின் மடியில் 08 . 09 . 1935



இறைவன் அடியில் 18 . 07 . 2019

### வீரகத்தி கணபதிப்பிள்ளை

கணப் பொழுதும் எண்ணவில்லை எம் கலங்கரை - விளக்கே!
நீங்கள் இமைப்பொழுதில் எம்மை விட்டு அகல்வீரென
அன்புடனும், பண்புடனும், பாசத்துடனும் வழிநடத்திய
எங்கள் அன்புத் தெய்வமே அப்பா!
நீங்கள் இல்லாத உலகம் என்றும் இருள் மயமானது
எங்கே காண்போம் உங்கள் மலர்ந்த முகத்தை
உங்கள் பிரிவைத் தாங்குமா எங்கள் இதயம்...
ஒவ்வொரு நொடியிலும் இதயத் துடிப்பைப் போல
உணர்கின்றோம்...
நீங்கள் கடந்து சென்றாலும் எங்கள் அருகில் - நீங்கள்
இருப்பதை நாங்கள் உணர்கின்றோம்.


இல.168 /2, டச்சு வீதி,
சாவகச்சேரி.

குடும்பத்தினர்
காண்டீபராஜா -
077 360 4014
ஐங்கரன், சேகரன்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஒன்றிணைந்து பயணிக்க விட்டுக்கொடுப்பு வேண்டும்

## செல்வம் எம்.பி. கோரிக்கை



**யாழ்ப்பாணம், ஜூலை 22**

**நாடாளுமன்றக் குழுத் தலைவர் பதவி தொடர்பாகத் தமிழரசுக் கட்சி விட்டுக்கொடுப்புடன் செயற்பட வேண்டும். இல்லாவிடின் ஒற்றுமை என்பது கானல் நீராகப் போவதற்கான நிலைமைகள்தான் உருவாகும்.**

-இவ்வாறு ரெலோ அமைப்பின் தலைவரும், நாடாளுமன்ற உறுப்பினருமான செல்வம் அடைக்கலநாதன் சுட்டிக்காட்டியுள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்; எதிர்வரும் தேர்தல்களில் போராட்டங்கள் மற்றும் தமிழ்மக்களின் இனப்பிரச்சினைத் தீர்வுக்காக நாங்கள் ஒன்றிணைந்து செயற்படுவது அவசியம்.

நாடாளுமன்றக் குழுத் தலைவர் பதவி உட்பட எல்லாவற்றையும் தமிழரசுக் கட்சி தான் எடுத்துக் கொள்ளவேண்டும் என்ற அடிப்படையில் கருதிச் செயற்பட்டால் ஒற்றுமை என்பது கானல் நீராகப்போவதற்கான நிலைமைகள் தான் உருவாகும். நாடாளுமன்றக் குழுத் தலைவர் பதவிக்காக பிரிவினைகளை உருவாக்காது அனுசரித்துப்போகும் வகையில் தமிழரசுக் கட்சி செயற்பட வேண்டும் - என்றார். (ச-66)



## போராடினால் பணிநிறுத்தம்

கொழும்பு, ஜூலை 22

ரயில்வே ஊழியர்கள் தொடர்ந்தும் வேலைநிறுத்தப் போராட்டத்தில் ஈடுபட்டால் சேவையில் இருந்து விலகியதைப் போன்று பணிநீக்கம் செய்யப்படுவார்கள் என்று போக்குவரத்து மற்றும் நெடுஞ்சாலைகள் அமைச்சர் பந்துல குணவர்த்தன எச்சரிக்கை விடுத்துள்ளார்.

நாம் அனைவரும் நாட்டின் சட்டங்களை மதிக்கவேண்டும். இல்லையெனில் நாம் பொதுச் சேவை செய்ய முடியாது. ரயில்வே சேவை அத்தியாவசிய சேவை என வர்த்தமானியில் வெளியிடப்பட்டுள்ளது.

மக்கள் பாதிக்கப்படும் வகையில் வேலைநிறுத்தத்தில் ஈடுபட்டால் பணியிலிருந்து நீக்கப்படுவார்கள் எனவும் அவர் குறிப்பிட்டார். (ச-இ)

## டெங்கு உயர்வு

### 30,000 பேர் அடையாளம்

### 12 பேர் உயிரிழப்பு

கொழும்பு, ஜூலை 22

நாட்டில் இந்த வருடத்தின் இதுவரையான காலப்பகுதிக்குள் மாத்திரம் 30,663 டெங்கு நோயாளர்கள் அடையாளம் காணப்பட்டுள்ளனர் என்று தேசிய டெங்கு நோய் கட்டுப்பாட்டுப் பிரிவு தெரிவித்துள்ளது.

அத்துடன் டெங்கு நோயினால் இதுவரையில் 12 பேர் உயிரிழந்துள்ளனர். அதிகளவான டெங்கு நோயாளர்கள் கொழும்பு மாவட்டத்தில் பதிவாகியுள்ளனர்.

நாட்டில் தற்போது நிலவும் சீரற்ற காலநிலை காரணமாக டெங்கு நோய் பரவக்கூடிய வாய்ப்பு அதிகரித்துள்ளது என்றும் தேசிய டெங்கு நோய் கட்டுப்பாட்டுப் பிரிவு தெரிவித்துள்ளது. (ச-இ)

## மாவா பாக்குடன் இளைஞர் கைது

யாழ்ப்பாணம், ஜூலை 22

மாவா பாக்கை உடைமையில் வைத்திருந்த குற்றச்சாட்டில் கைதான இளைஞரை விளக்கமறியலில் வைக்குமாறு நீதிமன்று உத்தரவு பிறப்பித்துள்ளது.

மானிப்பாய் பொலிஸார் சங்கானை பகுதியில் வைத்து குறித்து இளைஞரை கடந்த வெள்ளிக்கிழமை கைது செய்துள்ளனர். (ச-25, 125)




## கஞ்சிப்பானை சகாக்கள் 16 பேர் கைது

கொழும்பு, ஜூலை 22

பாதாளஉலகக்கும்பலின் தலைவன் கஞ்சிபானை இம்ரானின் போதைப் பொருள் கடத்தலுக்குத் தலைமை தாங்கிய குற்றச்சாட்டில் பெண் ஒருவர் உட்பட 16 பேரை கொழும்பு குற்றப்பிரிவு கைது செய்துள்ளது.

வெளிநாட்டில் உள்ள ஒழுங்கமைக்கப்பட்ட போதைப் பொருள் கடத்தலை அவர்கள் வழிநடத்தி வந்துள்ளதாக விசாரணையில் தெரிய வந்துள்ளது. (ச-இ)

## முகக்கவசம் அணியுங்கள்



கொழும்பு, ஜூலை 22

நாட்டில் சிறுவர்கள் மத்தியில் ஆஸ்துமா மற்றும் சுவாச நோய்களின் தாக்கம் தற்போது அதிகரித்துள்ளதால் முகக்கவசம் அணியுமாறு மருத்துவர்களால் அறிவுறுத்தப்பட்டுள்ளது.

இன்புளுவென்சா மற்றும் சாதாரண வைரஸ் தொற்று என்பன தற்போது பரவி வரும் நிலையில், அதுதொடர்பில் அவதானமாக இருக்க வேண்டும் என்றும் அவர்கள் குறிப்பிட்டனர். (ச-இ)




## தினம் தெரியுமோ?

இப்போதைக்கு உந்தச் சாவகச்சேரி ஆஸ்பத்திரிப் பிரச்சினைக்கு ஒரு முடிவு வராது போலதான் கிடக்குது. ஏனெண்டால் அதைவைச்சு லாபம் பாக்கலாம் எண்டு சில தரப்புகள் நினைக்கினமாம். உண்மையில டாக்குத்தர் அர்ச்சுனாவின்ர விசயத்தை முதல்ல பெரிசா வெளியில கொண்டந்தது அமுல்பேபி அரசியல்வாதியின்ர ஆக்கள் தான். அவைதான் உதைப்பற்றி பேஸ்புக்கிலையும், யூரியூப்பிலையும் இரவு பகலா எழுதி சனத்தின்ர கவனத்தை அங்க திருப்பினவை. அதுவும் ஒருவகையில நல்லதுதான். அதாலதான் கனபேருக்கு சாவகச்சேரி ஆஸ்பத்திரியில மட்டுமில்லாமல், மற்ற ஆஸ்பத்திரியளில நடக்கிற விளையாட்டுகளும் தெரியவந்தது. இப்பிடி பிரச்சினையைப் பெரிசாக்கி, சாவகச்சேரி ஆஸ்பத்திரியில ஜெனரேட்டர் இல்லாதபடியாலதான் ஒப்பிரேசன் தியேட்டரைத் திறக்கவிடாமல் பண்ணுகினம் எண்டதையும் 'போக்கஸ்' பண்ணிப்போட்டு, அமுல்பேபி அரசியல்வாதி தன்னட்ட இருக்கிற ஜெனரேட்டரைக் கொண்டந்து குடுத்து, அப்பிடியே வாக்குகளுக்கு தூண்டில் போடுறதுதான் பிளானா இருந்ததாம். ஆனால் டாக்குத்தர் அர்ச்சுனா வேற பக்கத்தால பிரச்சினையைக் கொண்டுபோக, கடைசியா அவர் அந்த ஆஸ்பத்திரியைவிட்டே போக வேண்டி வந்திட்டு. அதால அமுல்பேபியர், அர்ச்சுனா போனபிறகுதான் அந்த ஜெனரேட்டரை சாவகச்சேரி ஆஸ்பத்திரிக்கு குடுக்கவேண்டியதாப் போட்டுது.

இது டாக்குத்தர் அர்ச்சுனாவுக்கு கடுப்பைக் கிளப்பிட்டுது. தான் நிக்கேக்க அந்த ஜெனரேட்டரைத் தந்திருந்தால் சனத்தின்ர சப்போர்ட் இன்னும் கூடியிருக்கும் எண்டதோட, தன்னால என்ன செய்ய முடியும் எண்டதையும் காட்டியிருக்கலாம் எண்டது அவரின்ர கவலை. அதாலதான் அமுல்பேபியரின்ர ரீவிக்காரர் பேட்டி எடுக்கேக்க, திரும்ப திரும்ப கடற்றொழில் அமைச்சரைத்தான் அர்ச்சுனா 'ஆஹா ஓஹோ' எண்டு புளுகினவர். அதோட லைட்டா அமுல்பேபியருக்கு எதிராவும் சில சொல்லுகளை விட்டவர். தன்ர வாக்கு வங்கிக்கு உதவுவார் எண்டு பார்த்தால், இப்ப ஆள் வண்டிலை மற்றப் பக்கம் விட்டிட்டுதே எண்டு அமுல்பேபியருக்கும் ஆத்திரம் வந்தவுடன, இவரும் தன்ர ஆக்களுக்கு அர்ச்சுனாவுக்கு எதிரா வேலை செய்யச் சொல்லி ஓர்டர் போட்டிருக்கிறார். அதாலதான் முதல்ல அர்ச்சுனாவுக்கு ஆதரவா பதிவு போட்டு, அவரைத் தலையில வைச்சுக்கொண்டாடின சிலர்பிறகு 'யூ-ரேர்ன்' அடிச்சு, அப்பிடியே அவதூறா எழுத வெளிக்கிட்டவையாம்.

பழம் நழுவிப் பாலில விழுந்தமாதிரி, அர்ச்சுனா தன்னைப் புகழ்ந்ததாலை இதைவைச்சு சாவகச்சேரிச் சனத்தை தன்ர பக்கம் வளைச்சுப் போடலாம் எண்டு கடற்றொழில் அமைச்சரும் இப்ப நேரடியாகக் களத்தில குதிச்சிட்டாராம். 'டாக்குத்தர் அர்ச்சுனாவை சாவகச்சேரி ஆஸ்பத்திரிக்கே திரும்பப் போடுங்கோ இல்லாட்டி யாழ்ப்பாணத்தில உள்ள வேற ஏதும் ஆஸ்பத்திரிக்காவது பொறுப்பாப் போடுங்கோ' எண்டு அவர் மேல்மட்டங்களிட்டக் கேட்டவராம். ஆனால் இன்னும் ஒழுங்கான சிக்னல் கிடைக்கேலை எண்டு கேள்வி. நேற்று சாவகச்சேரி ஆஸ்பத்திரிப் பக்கமா அவர் 'விசிட்' அடிச்சதுக்கும் உதுதான் காரணமாம்.



-பட்சி

padsi@uthayan.com

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## நினைவேந்தல்

யாழ்ப்பாணம் ஜூலை 22
குரலற்றவர்களின் குரல் அமைப்பின் ஏற்பாட்டில் இலங்கைச் சிறைகளுக்குள் இரையாக்கப்பட்ட ஈழத்தமிழ் அரசியல் கைதிகளின் பொதுநினைவேந்தல் நிகழ்வு குரலற்றவர்களின் குரல் அமைப்பின் ஒருங்கிணைப்பாளர் மு.கோமகன் தலைமையில் யாழ். தந்தை செல்வா கலையரங்கில் எதிர்வரும் 25 ஆம் திகதி வியாழக்கிழமை பிற்பகல் 3.05 மணியளவில் இடம்பெறவுள்ளது. நிகழ்வில் சிறைகளுக்குள் கொல்லப்பட்ட தமிழ் அரசியல் கைதிகளுக்கும் அஞ்சலி செலுத்தப்படவுள்ளது.
அதனைத் தொடர்ந்து நினைவுரைகளும் நடைபெறுமென நிகழ்வின் ஏற்பாட்டாளர்கள் தெரிவித்துள்ளனர். (ச-22,66)



சுவாமி விபுலானந்தர் நினைவுப்பேருரை தமிழி அமைப்பும் கல்லூரிச் சமூகமும் இணைந்து நடத்திய முத்தமிழ் வித்தகர் சுவாமி விபுலானந்தர் நினைவும் நினைவுப்பேருரை நிகழ்வும், மானிப்பாய் இந்துக் கல்லூரியின் பிரதான மண்டபத்தில் கல்லூரி முதல்வர் இ.திலீப்குமார் தலைமையில் கடந்த வெள்ளிக்கிழமை இடம்பெற்றது. (ப)

## வெளிநாட்டு வேலைவாய்ப்பு தெளிவூட்டல் கருத்தரங்கு

கொடிகாமம் , ஜூலை 22
வெளிநாட்டு வேலைவாய்ப்பைத் தேடுபவர்களுக்கு பாதுகாப்பான புலம்பெயர்தல் தொடர்பாகவும், இலங்கை வெளிநாட்டு வேலைவாய்ப்புப் பணியகத்தால் மேற்கொள்ளப்படும் நலன்புரி சேவைகள் தொடர்பானதுமான தெளிவூட்டல் நிகழ்ச்சித்திட்டம் தென்மராட்சிப் பிரதேச செயலக மாநாட்டு மண்டபத்தில் எதிர்வரும் 23ஆம் திகதி செவ்வாய்க்கிழமை காலை 9 மணிக்கு இடம்பெறவுள்ளது. (ச-22,159)



## அகழ்வாய்வு நிறைவும் சான்றிதழ் வழங்கலும்

யாழ்ப்பாணம், ஜூலை 22
பிரித்தானிய சமூக முன்னேற்ற மையத்தின் மரபுரிமை அலகின் நிதிப் பங்களிப்புடனும் யாழ்ப்பாண மரபுரிமை மையத்தின் அனுசரணையுடனும் மேற்கொள்ளப்பட்ட ஆனைக்கோட்டை தொல்லியல் அகழ்வாய்வின் நிறைவு விழாவும் சான்றிதழ் வழங்கும் வைபவமும் யாழ்ப்பாண மரபுரிமை மையத்தின் தலைவரும் வாழ்நாள் பேராசிரியருமான பரமு புஷ்பரட்ணம் தலைமையில் யாழ். பண்பாட்டு மையத்தில் நேற்றுமுன்தினம் சனிக்கிழமை இடம்பெற்றது.
இந்த நிகழ்வில் பிரதம விருந்தினராக மருத்துவ பீட முன்னாள் பீடாதிபதியும் பேராசிரியருமான சுப்பிரமணியம் ரவிராஜ் , ஜேர்மன் தொல்லியலாளர் கலாநிதி அரியானி, தொல்லியல் திணைக்கள முன்னாள் பணிப்பாளர் கலாநிதி எச்.நிமால் பெரேரா, தொல்லியல் திணைக்களப் பணிப்பாளர் யு.ஏ. பந்துல ஜீவ உட்படப் பேராசிரியர்கள் , விரிவுரையாளர்கள், தொல்லியல் திணைக்கள அதிகாரிகள், யாழ். பல்கலைக்கழக மாணவர்கள் எனப் பலரும் கலந்துகொண்டனர் . (ச-22,125,27)

## சமகால அரசியல் கலந்துரையாடல்

யாழ்ப்பாணம் , ஜூலை 22
சமூக மாற்றத்துக்கான போராட்ட இயக்கத்தின் ஏற்பாட்டில் 'சமகால சமூக அரசியல் பொருளாதார சூழலை விளங்கிக் கொள்ளுதல்' என்னும் தொனிப் பொருளில் பெண்கள் உரிமைகள், அரசியலில் பெண்கள் எதிர்நோக்கும் சமூக பொருளாதார நிதிப் பிரச்சினைகள் தொடர்பான கலந்துரையாடல் யாழ்ப்பாணம் தந்தை செல்வா கலையரங்கில் நேற்று முன்தினம் சனிக்கிழமை நடைபெற்றது.
இந்த நிகழ்வில் தேர்தல் வன்முறைகள் நிலையத்தின் தேசிய அமைப்பாளர் ஏ.எம்.ரி.விக்ரர், வடமாகாண சபை முன்னாள் அமைச்சரும் தமிழர் சுயாட்சி கழகத்தின் செயலாளர் நாயகமுமாகிய அனந்தி சசிதரன் மற்றும் சமூக செயற்பாட்டாளரான ரஜனி ராஜேஸ்வரி மற்றும் சிவில் சமூக அமைப்புகளின் பிரதிநிதிகள் எனப் பலரும் கலந்துகொண்டனர். (ச-22,20,159)



நீர்வேலிதெற்கு, ஞான வைரவப் பெருமாள் கோவில் வருடாந்த பொங்கல் நிகழ்வு, அன்னமயில் இடம்பெற்றது. (ப-17)

## நாய்களுக்கு விசர்த்தடுப்பூசி

கிளிநொச்சி, ஜூலை 22
கிளிநொச்சி பிராந்திய சுகாதார சேவைகள் பணிமனைக் குட்பட்ட, விலங்கு விசர்த்தடுப்பூசி நிலையத்தின் ஏற்பாட்டில் தடுப்பூசி வழங்கும் பணி கிளிநொச்சி பழைய மருத்துவமனை வளாகத்தில் ஒவ்வொரு சனிக்கிழமையும் காலை 8 மணி முதல் நண்பகல் 12 மணிவரை தடுப்பூசி ஏற்றப்படவுள்ளது.
மக்கள் தமது நாய்களைக் கூட்டிவந்து தடுப்பூசியைப் பெற்றுக்கொள்ள முடியும் என மாவட்ட தொற்றுநோய் மருத்துவர் மு.ரஞ்சன் தெரிவித்துள்ளார். (ஒ-25,113)

## இன்றைய (ராசிபலன்)

**மேடம்:** பிள்ளைகளுக்காக செலவு செய்ய நேரும். வயிறு தொடர்பான பிரச்சினை ஏற்படக்கூடும். உணவு விடயத்தில் கவனம் தேவை. நல்ல செய்தி கிடைப்பதற்கு வாய்ப்பு உண்டு. வியாபாரத்தில் விற்பனையும் இலாபமும் எதிர்பார்த்த படியே இருக்கும்.

**இடபம்:** தன்னம்பிக்கையுடன் செயற்படுவீர்கள். குடும்பத்தில் மகிழ்ச்சி நிலவும். சிலருக்கு எதிர்பாராத பணவரவுக்கும் வாய்ப்பு உண்டு. வியாபாரத்தில் விற்பனையும் இலாபமும் கூடுதலாகக் கிடைக்கும். உற்சாகமாக இருப்பீர்கள்.

**மிதுனம்:** புதிய முயற்சிகளைத் தவிர்க்கவும். உடல்நலனில் கவனம் தேவை. குடும்பத்தில் உறவினர்களால் செலவுகள் ஏற்படலாம். மகிழ்ச்சியே ஏற்படும். எதிர்பார்த்த காரியம் அனுகூலமாக முடியும்.

**கடகம்:** அனுகூலமான நாளாக இருக்கும்.சகோதர வகையில் எதிர்பார்த்த காரியம் சாதகமாகும். பண உதவி கிடைக்கும். சிலருக்கு வீண் செலவுகள் ஏற்படும். அலைச்சலும் சோர்வும் ஏற்படும். வியாபாரத்தில் எதிர்பார்த்த இலாபம் கிடைக்கும்.

**சிம்மம்:** நண்பர்கள் மூலம் கிடைக்கும் செய்தி மகிழ்ச்சி தருவதாக இருக்கும். புதிய முயற்சி சாதகமாக முடியும். நீண்டநாள்களாக எதிர்பார்த்த பணம் இன்று கிடைக்கக்கூடும். மற்றவர்களுடன் மனஸ்தாபம் ஏற்படும் .

**கன்னி:** மனதில் சிறுசிறு குழப்பங்கள் ஏற்பட்டு நீங்கும். முடிவு எடுப்பதில் பெரியவர்களின் ஆலோசனை அவசியம். செலவுகளால் கடன் வாங்க நேரிடும். வியாபாரத்தில் விற்பனையும் இலாபமும் சுமாராகத்தான் இருக்கும்.

**துலாம்:** எதிலும் பொறுமையைக் கடைப்பிடிப்பது நல்லது. மற்றவர்களால் மறைமுகத் தொல்லைகளும், விமர்சனங்களும் ஏற்படக்கூடும். சிறு சங்கடம் ஏற்படும் என்றாலும் பாதிப்பு எதுவும் இருக்காது. செலவு செய்ய வேண்டி வரும்.

**விருச்சிகம் :** புதிய முயற்சிகள் வெற்றிகரமாக நிறைவேறும். எதிரிகளால் ஏற்பட்ட தொல்லைகள் விலகும். சகோதரர்களால் ஆதாயம் உண்டாகும். குடும்பத்தில் மகிழ்ச்சி நிலவும். முடிவு எடுப்பதற்கு உகந்த நாள்.

**தனுசு:** சாதிக்கும் நாளாக அமையும். பொருள் சேர்க்கைக்கு வாய்ப்பு உண்டு. கொடுத்த கடன் திரும்பக் கிடைப்பதற்கு வாய்ப்பு உள்ளது. வியாபாரத்தில் இலாபம் கூடுதலாகக் கிடைக்கும். சக வியாபாரிகளால் அனுகூலம் உண்டாகும்.

**மகரம்:** புதிய முயற்சிகளைத் தவிர்க்கவும். வழக்கமான பணிகளிலும் கூடுதல் கவனம் தேவை. உறவினர்களுடன் கருத்து வேறுபாடுகள் ஏற்படக்கூடும். பொறுமை அவசியம். தட்சணாமூர்த்தியை வழிபட சிரமங்கள் குறையும்.

**கும்பம்:** மகிழ்ச்சி தரும் நாள். கருத்து வேறுபாடுகள் நீங்கும். குடும்பத்தினரின் தேவைகளை நிறைவேற்றுவீர்கள். உறவினர்களிடம் எதிர்பார்த்த உதவி கிடைக்கும். மனதில் தன்னம்பிக்கை அதிகரிக்கும். பொறுமை அவசியம்.

**மீனம்:** எடுத்த காரியம் அனுகூலமாக முடியும். உறவினர்கள் வகையில் எதிர்பார்த்த உதவி கிடைக்கும். உடல் ஆரோக்கியம் மேம்படும். புதிய முயற்சி சாதகமாக முடியும். சிலருக்கு எதிர்பாராத பணவரவுடன் திடீர் செலவுகளும் ஏற்படக்கூடும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உண்மை - நேர்மை - அஞ்சாமை

உதயன்

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

# தமிழ்மக்களும் பொதுவேட்பாளரும்

**22** ஆம் திருத்தத்தை வர்த்தமானியில் பிரசுரித்ததால் ஜனாதிபதித் தேர்தலுக்குப் பாதிப்பில்லை என தேர்தல்கள் ஆணைக்குழு தெரிவித்துள்ளது. ஆனாலும், மக்களுக்குத் தேர்தல் நடக்கும் வரையில் தேர்தல் மீதான சந்தேகம் இருக்கத்தான் செய்யும். தமிழ் அரசியல் பரப்பில் சில விடயங்களால் தமிழ்ப் பொதுவேட்பாளர் தொடர்பான பேச்சுகள் அமிழ்ந்து போயுள்ளன அல்லது அமிழ்ந்துபோகச் செய்யப்பட்டுள்ளன.

எனினும் இம்முறை ஜனாதிபதித் தேர்தலில் சிங்களத் தரப்புகளுக்கு தமிழர்கள் வாக்களிப்பதில்லை என்ற நிலைப்பாடு முதன்மைப்படுத்தப்பட்டிருப்பதைப் பரவலாக அவதானிக்கமுடிகின்றது. போரின் பின்னரான அனைத்து ஜனாதிபதித் தேர்தல்களிலும் ராஜபக்சக்களைத் தோற்கடிப்பது என்ற ஒற்றை இலக்கை மாத்திரம் மனதில் கொண்டு தமிழர்கள் வாக்களித்திருந்தார்கள். அவ்வாறு வாக்களித்திருந்தாலும் தமிழர்களின் வாக்குகளைப் பெற்ற சிங்களத் தரப்புகள் அதை எப்படியெல்லாம் திசை திருப்புகின்றன என்பதற்கு சரத்பொன்சேகாவின் அண்மைய பேச்சுகள் மிகச் சிறந்த உதாரணம்.


இப்படிப்பட்ட நிலையில் தமிழ் மக்களின் வாக்குகள்தான் தங்களின் வெற்றியைத் தீர்மானிக்கப் போகின்றன என்பது உறுதியான நிலையிலும் கூட சிங்கள வேட்பாளர் எவரும் தமிழ் மக்களின் அடிநாதமான இனப்பிரச்சினைக்கு உருப்படியான தீர்வை முன்வைக்கத் தயாரில்லை. 1987 ஆம் ஆண்டிலேயே தமிழர்களால் நிராகரிக்கப்பட்ட 13 ஆவது திருத்தத்தினுள்ளேயே சிங்கள வேட்பாளர்கள் நின்று சுற்றிக்கொண்டிருக்கின்றார்கள். அப்படிப்பட்டவர்களுக்கு தமிழர்கள் எப்படி வாக்களிக்கமுடியும்?

தங்களின் பதவி பவிசுகளுக்காக சிங்கள வேட்பாளர்களுக்கு வாக்களிக்கச் சொல்லி சில தமிழ்த் தலைவர்கள் கேட்கக்கூடும். அப்படிப்பட்டவர்கள் தங்களின் சுயலாபத்துக்காக தமிழர்களை அடகுவைக்கின்றார்கள் என்பதை தமிழ்ச் சமூகம் புரிந்துகொண்டு எதிர்காலத்தில் அவர்களது அரசியலை வேரறுக்க வேண்டும்.

இவை எல்லாவற்றுக்கும் அப்பால் தமிழ்ப் பொது வேட்பாளர் தமிழ் மக்களின் காலத்தின் தேவை என்ற நிலையில், அதை முன்கொண்டு செல்வதிலும் அதீத மெத்தனப்போக்கு காணப்படுகின்றது. தமிழ்ப் பொது வேட்பாளரை ஆதரிக்கும் தமிழ்த் தேசிய அரசியல் தரப்புகள் அதனை மக்கள் முன்கொண்டு செல்வதில் அக்கறையற்று இருக்கின்றன.

தமிழ்த் தேசிய அரசியல் தரப்புகளாக தம்மை இன்று முன்னிறுத்துவோர்கூட வாக்கு அரசியலுக்காகவே தங்கள் நகர்வுகளை முன்னெடுக்கின்றனர். அவர்களிடம் தமிழ்த் தேசியம் மீதான அர்ப்பணிப்பு என்பது பெரும்குறைவு. தமிழ்த் தேசியத்தை வைத்து தங்கள் வாக்கு வங்கியை உறுதிப்படுத்திக்கொள்கின்றனர். அப்படிப்பட்டவர்கள் காலத்தின் தேவையாகவுள்ள தமிழ்ப் பொதுவேட்பாளர் விடயத்தை ஆத்மார்த்தமாக மக்களிடம் எடுத்துச் செல்வார்கள் என்று எதிர்பார்க்க முடியாது. நாடாளுமன்றத் தேர்தலில் தங்களின் வெற்றிக்காக மக்களிடத்தே செல்பவர்கள், அதைவிட முக்கியமான தேசத்தின் நலனுக்குத் தேவையான தமிழ்ப் பொதுவேட்பாளர் விடயத்தை மக்களிடத்தில் கொண்டு செல்வதற்கு மந்தமாக இருக்கின்றார்கள்.

எனவே தமிழ்ப் பொதுவேட்பாளர் விடயத்தை முன்னிறுத்தும் சிவில் அமைப்புகளே மக்களிடத்தில் இதைக்கொண்டு சேர்ப்பதற்கும் இறங்கிப் பணியாற்றவேண்டியிருக்கும். அப்படிச் செய்வதன் ஊடாக எதிர்காலத்தில், தமிழ்த் தேசிய அரசியலை தீர்மானிக்கும் சக்தியாக தமிழ்ச் சிவில் சமூகம் மாறலாம். அப்படியான மாற்றம் வந்தால்தான், தமிழ்த் தேசிய அரசியலை வெறுமனே வாக்குக்காக முன்னெடுப்பவர்கள் தமிழ்ச் சமூகத்திலிருந்து ஓரங்கட்டப்படுவர்.



# 22 ஆவது திருத்தச் சட்டம் தேர்தலுக்குத் தடையில்லை

## தேர்தல்கள் ஆணைக்குழு தெரிவிப்பு

**கொழும்பு, ஜூலை 22**

**22 ஆவது அரசமைப்புத் திருத்தச்சட்டம் தொடர்பில் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவால் வெளியிடப்பட்டுள்ள வர்த்தமானி அறிவித்தலால் ஜனாதிபதித் தேர்தலுக்குத் தடைகள் எதுவும் ஏற்படாது என்று தேர்தல்கள் ஆணையாளர் நாயகம் சமன் ரத்நாயக்க தெரிவித்துள்ளார்.**

19 ஆவது திருத்தச்சட்டத்தில் ஜனாதிபதியின் பதவிக்காலம் 6 வருடங்களுக்குமேல் எனக் குறிப்பிடப்பட்டுள்ள சொற்பதத்துக்கு பதிலாக ஐந்து வருடங்களுக்கு மேல் எனக் குறிப்பிடும் வகையில் 22ஆவது திருத்தச்சட்டத்தை அரசாங்கம் முன்மொழிந்துள்ளது.

ஜனாதிபதியின் இந்த வர்த்தமானி அறிவித்தலால் ஜனாதிபதித் தேர்தலுக்குத் தடங்கல்கள் ஏதும் ஏற்படாது. ஜனாதிபதித் தேர்தலையும் சர்வஜன வாக்கெடுப்பையும் ஒரேதினத்தில் நடத்த முடியாது. இவை இரண்டும் இரண்டு கட்டங்களில் நடைபெறவேண்டியது. அதற்கான நிதி ஒதுக்கீடுகளும் அவ்வாறுதான் என்றும் சமன் ரத்நாயக்க சுட்டிக்காட்டினார். (ச-இ)

# வேட்பாளர் பாதுகாப்பு தேசபந்து நடவடிக்கை

கொழும்பு, ஜூலை 22

ஜனாதிபதி வேட்பாளர்களுக்குக் காணப்படும் அச்சுறுத்தல்கள் தொடர்பில் அறிக்கையொன்றை பெற்றுக்கொள்ள பொலிஸ்மா அதிபர் தேசபந்து தென்னகோன் தீர்மானத்துள்ளார்.

எதிர்வரும் ஜனாதிபதித் தேர்தலில் வேட்பாளர்களுக்கு பாதுகாப்பு வழங்க வேண்டிய முறை தொடர்பில் தீர்மானம் ஒன்றை எடுக்கும் நோக்கில் இந்த அறிக்கை கோரப்பட்டுள்ளது. (ச-இ)

# தேங்காய்க்கு தட்டுப்பாடு!

கொழும்பு, ஜூலை 22

நாட்டில் எதிர்காலத்தில் தேங்காய்க்கு தட்டுப்பாடு ஏற்படலாமென தெங்கு செய்கையாளர்கள் எச்சரித்துள்ளனர்.

வெள்ளை ஈ தாக்கம் காரணமாக சுமார் 5000 ஏக்கர் தெங்கு செய்கை முற்றாக அழிவடைந்துள்ளது. நிலைமையைக் கட்டுப்படுத்தாவிட்டால், தேங்காய்க்குத் தட்டுப்பாடு வரலாம் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ச-இ)

# எயார் லைன்ஸ் விற்பனை இரத்து

கொழும்பு, ஜூலை 22

இலங்கையின் தேசிய விமான சேவை நிறுவனமான சிறிலங்கன் எயார் லைன்ஸ் விமான சேவையின் உரிமையைக் கைமாற்றும் வகையில் இதுவரை காலமும் செயற்பாட்டிலிருந்த விலைமனுக்கோரல் செயற்பாடுகளைக் கைவிடுவதற்கு அமைச்சரவை தீர்மானித்துள்ளதாக முயற்சியாண்மை மறுசீரமைப்புப் பிரிவு குறிப்பிட்டுள்ளது. (ச-இ)

# ரூ. 796.5 பில்லியன் அரசாங்கம் கடன்

கொழும்பு, ஜூலை 22

இந்த ஆண்டின் முதல் நான்கு மாதங்களில் அரசாங்கம் 796.5 பில்லியன் ரூபாவை கடனாகப் பெற்றுள்ளதாக பொருளாதார ஸ்திரப்படுத்தல் மற்றும் தேசிய கொள்கை அமைச்சு வெளியிட்டுள்ள மத்திய ஆண்டு நிதி நிலை அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது. இந்தக் காலப்பகுதியில் கடன் சேவை மற்றும் அபிவிருத்தித் திட்டங்களுக்காக உள்நாட்டுக் கடனாக 734.2 பில்லியன் ரூபா பெறப்பட்டுள்ளதுடன், வெளிநாட்டு திட்டக்கடனாக பெறப்பட்ட தொகை 62.3 பில்லியன் ரூபாவாகும் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ச-இ)

**நாளை**

23.07.2024

செவ்வாய்க்கிழமை - ஆடி - 07

சுபநேரம் : 10.32 - 12.02

ராகுகாலம் : 03.02 - 04.32

முதலாம் ஆடிச்செவ்வாய்

**நாளொரு நல்வார்த்தை**

உங்களால் முடிந்த சிறந்ததை செய்யுங்கள், வாழ்க்கையை மிகவும் தீவிரமாக எடுத்துக்கொள்ளாதீர்கள்.

- வில் ரோஜர்ஸ்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




கிளிநொச்சி மாவட்ட பச்சிலைப்பள்ளிப் பிரதேச செயலக பிரிவுக்குட்பட்ட பளை மத்திய கல்லூரியின் பரிசளிப்புதினம், கல்லூரியின் மண்டபத்தில் நேற்று வெள்ளிக்கிழமை இடம்பெற்றது.

நிகழ்வில் விருந்தினர்களாக பேராசிரியர் துணைவேந்தர் சி.சிறிசற்குணராஜா, பச்சிலைப்பள்ளிப் பிரதேச செயலகத்தின் பிரதேச செயலர் இ.த.ஜெயசீலன் மற்றும் பிரதிக் கல்விப்பணிப்பாளர் ஆகியோர் கலந்துகொண்டனர். (ப-113-27)

யாழ்.வடமராட்சி கிழக்கு, குடத்தனை கிறிஸ்து நற்தூது பணியக முன்பள்ளியின் வருடாந்த விளையாட்டுப் போட்டி, முன்பள்ளி வளாகத்தில் போதகர் கமலகுமாரன் தலைமையில் கடந்த வெள்ளிக்கிழமை பி.ப. 3 மணிக்கு இடம்பெற்றது.

நிகழ்வில் அயல் முன்பள்ளி ஆசிரியர்கள், முன்பள்ளி மாணவர்கள், பெற்றோர், பழைய மாணவர்கள் மற்றும் நலன்விரும்பிகள் எனப் பலரும் கலந்துகொண்டனர். (ப-27)





வடக்கு மாகாணக் கல்விப் பண்பாட்டலுவல்கள் விளையாட்டுத்துறை மற்றும் இளைஞர் விவகார அமைச்சின் நிதியனுசரணையுடன் சண்டிலிப்பாய் பிரதேச செயலகத்தால் நடத்தப்பட்ட ஆடிப்பிறப்பு விழா, நவாலி வடக்கில் அமைந்துள்ள மணிமண்டபத்தில் கடந்த புதன்கிழமை இடம்பெற்றது. சண்டிலிப்பாய் பிரதேச செயலர் திருமதி சுபாஜினி மதியழகன் தலைமையில் நடைபெற்ற நிகழ்வில், யாழ். மாவட்டச் செயலக சிரேஷ்ட கலாசார உத்தியோகத்தர் திருமதி சுகுணலினி விஜயரட்ணம், சமூக சேவகர் க.செல்வகுமாரன் ஆகியோர் விருந்தினர்களாகக் கலந்துகொண்டனர். (ப-66)



சந்நிதியான் ஆச்சிரம சைவகலை பண்பாட்டுப் பேரவையின் ஏற்பாட்டில் வாராந்த நிகழ்வு கடந்த வெள்ளிக்கிழமை சந்நிதியான் ஆச்சிரம மண்டபத்தில் நடைபெற்றது. சந்நிதியான் ஆச்சிரம முதல்வர் செ.மோகனதாஸ்சுவாமிகள் தலைமையில் இடம்பெற்ற நிகழ்வில் தொல்பொருள் திணைக்கள அபிவிருத்தி உத்தியோகத்தர் கயிலைநாதன் கயிலைவாசன் கலந்துகொண்டு 'தமிழே முருகன்' எனும் தலைப்பில் ஆன்மீகச் சொற்பொழிவை நிகழ்த்தினார். (ச-66)



உரும்பிராய் ஸ்ரீ காளி அம்பாள் ஆலயத்தின் குரோதி வருட மஹோற்சத்தின் தேர்த் திருவிழா நேற்றுமுன்தினம் சனிக்கிழமை முற்பகல் 11 மணியளவில் நூற்றுக்கணக்கான அடியவர்களின் பங்குபற்றுதலுடன் சிறப்பாக இடம்பெற்றது. (ச-66)



யாழ்.மானிப்பாய் மகளிர் கல்லூரியின் தரம்-10 மாணவிகளுக்கான தொழில் வழிகாட்டல், திறன் விருத்தி, அறிவு முகாமைத்துவம் மற்றும் முரண்பாட்டு முகாமைத்துவம் தொடர்பான விழிப்பூட்டல் செயலமர்வு, மேற்படி பாடசாலையில் கடந்த வியாழக்கிழமை நடைபெற்றது. (ப-66)



போக்கட்டி அ.த.க. பாடசாலையின் மாணவர்களின் மாதிரிச் சந்தை நிகழ்வு பாடசாலை அதிபர் தி.அபராஜிதன் தலைமையில் இடம்பெற்றது. நிகழ்வில் விருந்தினர்களாக தென்மராட்சி கல்வி வலய கணித பாட உதவிக் கல்விப்பணிப்பாளர் எஸ்.நவநீதன், கொடிகாமம் மக்கள் வங்கி பிரதிமுகாமையாளர் ஆ.பரணன், போக்கட்டி றோ.க.த.க பாடசாலை முதல்வர் திருமதி கௌ.சிவசுதன், ஆசிரியர்கள், மாணவர்கள், பெற்றோர் கலந்துகொண்டனர். (ச-159)



கிளிநொச்சி, இராமநாதபுரம் வயலூர் முருகன் ஆலயத்துக்கு புதிதாக நிர்மாணிக்கப்பட்ட சித்திரத்தேர் வெள்ளோட்ட நிகழ்வு கடந்த வெள்ளிக்கிழமை பக்தி பூர்வமாக இடம்பெற்றது. (ச-113)

கிளிநொச்சி மத்திய கல்லூரியின் மாணவ மற்றும் வகுப்பு முதல்வர்களுக்கு இடர் முகாமைத்துவம் தொடர்பான பயிற்சிப் பட்டறை, பாடசாலை மண்டபத்தில் கடந்த வியாழக்கிழமை நடைபெற்றது. வளவாளராக கிளிநொச்சி தெற்கு வலயத்தின் ஆசிரிய ஆலோசகர் எஸ்.திருக்குமரன் கலந்துகொண்டார். (ஒ-25,13)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஒற்றுமையின் அடையாளமே தமிழ்ப் பொதுவேட்பாளர்

## சித்தார்த்தன் எம்.பி. தெரிவிப்பு

**வவுனியா, ஜூலை 22**

**தமிழ் மக்கள் ஒற்றுமையாக இருக்கின்றோம் என்பதை வெளிப்படுத்துவதான் எங்களது விருப்பம். அதுதான் பொது வேட்பாளர் விடயம் என புளொட் அமைப்பின் தலைவரும் நாடாளுமன்ற உறுப்பினருமான த.சித்தார்த்தன் தெரிவித்துள்ளார்.**

அவர் மேலும் தெரிவித்ததாவது: சாத்வீக அல்லது ஆயுதப் போராட்டங்கள் இந்த நாட்டில் என்ன காரணத்துக்காகத் தொடங்கப்பட்டனவோ அந்த நோக்கங்கள் இன்று வரை இருக்கின்றன. ஆனால், எமது மக்கள் தொகை இந்த நாட்டில் குறைந்து வருகின்றது. 15 இலட்சத்துக்கும் அதிகமான மக்கள் புலம்பெயர்ந்திருக்கின்றார்கள்.

வெளிநாடுகளில் உள்ள எங்களது உறவுகள் எங்களுக்கு ஒரு உந்து சக்தியாக, பலமாக இருக்கிறார்கள். பேச்சு என்று வருகின்றபோது ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க கூட புலம்பெயர் தமிழ்மக்களுடன் பேச வேண்டும் எனச் சொல்கிறார். அவர்களிடம் இருக்கக்கூடிய பொருளாதாரப் பலத்தை இங்கு கொண்டு வரலாம் எனச் சிந்திக்கிறார். அதுபற்றி எம்முடன் கதைக்கின்றார்.

ஆனாலும் எந்தவொரு அரசாங்கமும் தமிழ் மக்களுக்கு நியாயமான ஒரு தீர்வை கொடுக்கத் தயாரில்லை. தமிழ் மக்கள் ஒற்றுமையாக இருக்கின்றோம் என்பதை உலகுக்குக் காட்டுவதுதான் எங்களது விருப்பம். அதுதான் பொது வேட்பாளர் விடயம்.

ஒற்றுமையைக் காட்டுவதன் மூலம் நாம் உலக நாடுகளிடையே எமது சரியான நிலைப்பாட்டை காட்டக் கூடியதாக இருக்கும். அதற்காகவே இந்த முயற்சியை செய்கிறோம்- என்றார். (ஒ-18)

# கல்லாறு மக்கள் தாகத்தில் தவிப்பு

கிளிநொச்சி, ஜூலை 22




கிளிநொச்சி, கண்டாவளை பிரதேச செயலர் பிரிவுக்குட்பட்ட கல்லாறு கிராமத்தில் 250 க்கும் மேற்பட்ட குடும்பங்கள் வசித்து வருகின்ற நிலையில் குடிதண்ணீரைப் பெற்றுக்கொள்வதில் நெருக்கடியை எதிர்நோக்கியுள்ளதாக அந்தப் பகுதி மக்கள் கவலை வெளியிட்டுள்ளனர்.

இந்தப் பகுதியிலுள்ள நீர் நிலைகளில் நீர் உவநீராகக் காணப்படும் நிலையில் குடிதண்ணீரை வழங்கும் பொருட்டு கரைச்சி பிரதேச சபையால் கல்லாறு கிராமத்துக்குக் குடிதண்ணீர் வழங்கப்பட்டு வந்தது.

இந்த நிலையில் இந்தக் குடிதண்ணீர் வழங்கும் திட்டம் தற்போது செயலிழந்து காணப்படுகின்றது. இதனால் மக்கள் தூய்மையான குடிதண்ணீரைப் பெறுவதற்குப் பணம் கொடுத்தே பெறவேண்டியுள்ளது.

எனவே தேசிய நீர் வழங்கல் வடிகாலமைப்புச்சபையூடாகத் தமக்கு நிலையான நீர் விநியோகத்தை வழங்க உரிய தரப்பினர் நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று அந்தப் பகுதி மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர். (ச-113)



# மன்னார் மாவட்டத்தில் புலமைப்பரிசில் திட்டம்

மன்னார், ஜூலை 22

மாணவர்களின் கல்வித் தரத்தை மேம்படுத்தும் நோக்கில், 'ஜனாதிபதி புலமைப்பரிசில் திட்டம்' கையளிக்கும் நிகழ்வு மன்னார் நகர மண்டபத்தில் இரு பிரிவுகளாக கடந்த புதன் கிழமை இடம்பெற்றது.

மன்னார் கல்வி வலயத்தில் 428 மாணவர்களும், மடு கல்வி வலயத்தில் 402 மாணவர்களும் ஜனாதிபதி புலமைப்பரிசிலைப் பெற்றுக்கொண்டனர். (ப-56)

# யானைகள் அட்டகாசம் பயிர்கள் துவம்சம்

பளை, ஜூலை 22

பளை - தர்மக்கேணி கிராமத்தில் இரவு வேளைகளில் புகும் யானைகள், அங்குள்ள காணிகளில் காணப்பட்ட தென்னம்பிள்ளைகள் மற்றும் பயன்தரும் மரங்கள் போன்றவற்றை துவம்சம் செய்து செல்கின்றன என்று அந்தப் பகுதி மக்கள் கவலை வெளியிட்டுள்ளனர்.

இதனால் வாழ்வாதாரம் பாதிக்கப்படுவதுடன் அச்சத்துடன் வசிக்க வேண்டிய நிலையேற்பட்டுள்ளது.

போர்க் காலத்தில் அழிக்கப்பட்ட பயன்தரும் மரங்கள் மீள்நடுகை செய்யப்பட்டு வரும் வேளையில் அவை யானைகளால் அழிக்கப்படுகின்றன என்றும் மக்கள் கவலை தெரிவித்துள்ளனர். (ப-9)



# கேட்டதோ குடிதண்ணீர் தந்ததோ பயனற்ற கட்டடம்

கிளிநொச்சி, ஜூலை 22

கிளிநொச்சி, ஐயன்கன்குளத்தில் அமைக்கப்பட்டுள்ள சந்தைக்கட்டடம் தற்போது கால்நடைகளின் உறைவிடமாக மாறியுள்ளது. நாம் குடிதண்ணீர்த் திட்டத்தை வழங்குமாறு கோரியபோதும் பயனற்ற வகையில் சந்தைக்கட்டடம் அமைக்கப்பட்டுள்ளது என்று கிராம மக்கள் தெரிவித்துள்ளனர். ஐயன்கன்குளத்தில் உவர்நீர்ப் பரம்பல் ஏற்பட்டு வருவதால் குடிதண்ணீருக்கான பிரச்சினையைத் தீர்க்குமாறு நாம் கோரிக்கை விடுத்திருந்தோம். ஆனால், ஒரு சிலரின் வேண்டுகோளின் அடிப்படையில் உள்ளூர் உற்பத்திப் பொருள்களை விற்பனை செய்யக்கூடிய சந்தை அமைக்கப்பட்டது.

சந்தைக் கட்டடம் அமைக்கப்பட்ட நாளில் இருந்து இதுவரை சந்தை இயங்காமலே உள்ளது. சந்தைக் கட்டடத்தின் தகரங்கள்கூட காற்றினால் பிடுங்கி எறியப்பட்டுள்ளன. இந்தச் சந்தைக் கட்டடம் தேவையற்றது என்றும் அவர்கள் தெரிவித்தனர். (ச-13)

# பளுதூக்கல் போட்டி; பரி.யோவான் பதக்கம்

யாழ்ப்பாணம், ஜூலை 22

மாகாணக் கல்வித் திணைக்களத்தால் நடத்தப்பட்ட, வடக்கு மாகாணப் பாடசாலைகளுக்கு இடையிலான பளுதூக்கல் போட்டியில் புனித பரி.யோவான் கல்லூரி வெற்றிபெற்று பதக்கங்களை தனதாக்கியுள்ளது.

17 வயதுக்குட்பட்ட ஆண்கள் பிரிவில் ச. வினோஜ் தங்கப்பதக்கத்தையும், பு. எழிலரசன் வெள்ளிப்பதக்கத்தையும், 20 வயதுக்குட்பட்ட ஆண்கள் பிரிவில் சு. சகிதன் தங்கப்பதக்கத்தையும், ஹீ. கயாணன் வெண்கலப்பதக்கத்தையும் பெற்று கல்லூரிக்குப் பெருமை சேர்த்தனர். (ப)






யாழ்ப்பாணம் இந்து ஆரம்பப் பாடசாலை மாணவர்களின் சிறுவர் சந்தை பாடசாலையின் அதிபர் பே.தனபாலசிங்கம் தலைமையில் பாடசாலை விளையாட்டு மைதானத்தில் இடம்பெற்றது. நிகழ்வில் யாழ். வலய ஆரம்பக் கல்வி உதவிக் கல்விப் பணிப்பாளர் இ.கணேசலிங்கம் பிரதம விருந்தினராகக் கலந்துகொண்டார். (ச-20)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## தருவதாகச்...

சரியான தெரிவு. இவ்வாறு யாழ். மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினரும் தமிழ் மக்கள் கூட்டணியின் செயலாளர் நாயகமுமான சி.வி.விக்னேஸ்வரன் தெரிவித்தார்.

தமிழ்மக்கள் கூட்டணியின் முதலாவது தேசிய மாநாடு நேற்று ஞாயிற்றுக்கிழமை மாலை 3 மணியளவில் யாழ். நகரில் அமைந்துள்ள தந்தை செல்வா கலையரங்கத்தில் க.வி.விக்னேஸ்வரன் தலைமையில் இடம்பெற்றது.

நிகழ்வில் தமிழரசுக் கட்சியின் யாழ். மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் சிவஞானம் சிறீதரன் பிரதம விருந்தினராகவும், யாழ்ப்பாணப் பல்கலைக்கழக அரசறிவியல் துறைத் தலைவர் கலாநிதி கே.ரி.கணேசலிங்கம் சிறப்புவிருந்தினராகவும் கலந்துகொண்டனர்.

இந்த மாநாட்டில் விக்னேஸ்வரன் ஆற்றிய உரையில் தெரிவித்ததாவது:-

நாங்கள் பொதுவேட்பாளரை நிறுத்த இருக்கின்றோம் என்றவுடன் மூன்று முக்கியமான சிங்கள வேட்பாளர்களும் தமது சேனை பரிவாரங்களுடனும் படைகளுடனும் இங்கு வந்து 13ஐ தருகின்றோம் என்று சொல்லிச் சென்றுள்ளார்கள். 13ஆவது திருத்தம் 1987ஆம் ஆண்டு தொடக்கம் அரசமைப்பில் இருந்து வருகின்றது. அதனை 1988 ஆம் ஆண்டு தொடக்கம் நடைமுறைப் படுத்தாது விட்டுவிட்டு 2024இல் வந்து நடைமுறைப்படுத்துவோம் என்று கூறினால் அதன் அர்த்தம் என்ன? 13 வேண்டாம் ஆனால் தமிழ்ப் பேசும் மக்களின் வாக்கு வேண்டும் என்பதே அதன் அர்த்தம். தமிழர்களின் வாக்குகளைப் பெறுவதற்காக வலிந்து வந்து 13 பற்றிக் கூறிச் சென்றுள்ளார்கள் சிங்களத் தலைவர்கள். போட்டி முடிந்ததும் 13 வேண்டாம் என்பார்கள். "நாம் யாவரும் ஒரு நாட்டு மக்களே எங்களுடன் சேருங்கள்" என்றெல்லாம் கூறுவார்கள்.

பறிபோன அதிகாரங்களைத் திரும்ப மாகாணசபைகளுக்குக் கையளிக்க உதவுவேன் என்று எனக்குச் சொன்ன தற்போதைய ஜனாதிபதி கடைசி நேரத்தில் அந்த நடவடிக்கையில் இருந்து பின்வாங்கிவிட்டார். ஆகவே இவர்கள் தருவதாகக் கூறுவார்கள் தரமாட்டார்கள். தரவிடமாட்டார்கள் பௌத்த பிக்குமாரும் மற்றையோரும். அதை நாங்கள் யாவரும் புரிந்து கொள்ளவேண்டும். இவர்களுடன் பேரம் பேசிப் பயனில்லை. ஏனென்றால் 13 பற்றியே அவர்கள் பேசுவார்கள். ஒற்றையாட்சியை மாற்றுவதற்கு எவரும் முன்வரமாட்டார்கள். எம்முடைய இன்றைய அவலம் ஒற்றையாட்சி அரசமைப்பு மூலம் வந்ததே என்பதை எமது தமிழ் மக்கள் ஆழ உணரவேண்டும். எமது தனித்துவத்தை ஏற்கும் ஓர் அரசமைப்பு உதயமாகவேண்டும்.

தமிழ்ப்பேசும் மக்கள் வேண்டுவது ஒற்றையாட்சி அரசமைப்பின் கீழான 13வது திருத்தச் சட்டத்தை அல்ல. எமக்கு சர்வதேசச் சட்டத்தின் கீழ் தரப்பட்டிருக்கும் சுயநிர்ணய உரிமையையே நாங்கள் கேட்கின்றோம். தமிழ்ப் பொதுவேட்பாளர் இந்தக் கருத்தையே தமிழ்ப்பேசும் மக்களிடையே முன்னிறுத்த இருக்கின்றார். வடகிழக்கில் ஐக்கிய நாடுகள் மக்கள் தீர்ப்பைக் கோரி தேர்தல் நடத்தட்டும். தமிழ்ப்பேசும் மக்கள் எதனைக் கோருகின்றார்களோ அதனை வழங்க ஐக்கிய நாடுகள் முன்வரவேண்டும் என்ற கருத்தை சர்வதேசத்தின் முன் முன்னிலைப்படுத்தவே தமிழ்ப் பொது வேட்பாளர் காத்து நிற்கின்றார். 13ஐத் தருவதால் எமது மக்களுக்கு விடிவு காலம் ஏற்படாது. ஏற்கனவே 13இன் கீழுள்ள பல அதிகாரங்கள் மத்திய அரசாங்கத்தினால் எம்மிடம் இருந்து பறித்தெடுக்கப்பட்டுள்ளன. இப்போது இருப்பது வெறும் கோதே! மேற் தோலே! அதிலும், தரப்பட்டிருக்கும் மிக சொற்ப பொலிஸ் அதிகாரங்களைக்கூட வழங்க முடியாது என்று ஒரு வேட்பாளர் கூறியுள்ளார்.

ஆகவே எங்களுடைய கட்சியின் இந்த தேசிய மகாநாட்டில் நாங்கள் யாவரும் தமிழ்ப் பொதுவேட்பாளருக்கு எதிர்வரும் ஜனாதிபதித் தேர்தலில் எங்களின் வாக்குகளை அளிப்போம் என்று உறுதி பூணுவோமாக - என்றார்.

இந்த மாநாட்டில் தமிழரசுக் கட்சியின் தலைவரும், நாடாளுமன்ற முன்னாள் உறுப்பினருமான மாவை.சேனாதிராசா, வடக்குமாகாண சபையின் முன்னாள் கல்வி அமைச்சர் க.சர்வேஸ்வரன், யாழ். மாநகர சபையின் முன்னாள் முதல்வர் விஸ்வலிங்கம் மணிவண்ணன், நல்லூர் பிரதேச சபையின் முன்னாள் தவிசாளர் ப.மயூரன் ஆகியோர் பங்கேற்றிருந்தனர்.

பிரதம விருந்தினராகப் பங்கேற்ற நாடாளுமன்ற உறுப்பினருக்கு சி.சிறீதரனுக்கு மேடையில் ஆசனம் ஒதுக்கப்பட்டிருந்த நிலையில் தமிழ் அரசுக் கட்சியின் தலைவர் மாவை.சோ.சேனாதிராசாவுக்கு கீழே முன்வரிசையிலேயே ஆசனம் வழங்கப்பட்டிருந்தமையும் குறிப்பிடத்தக்கது. (அ-ஒ-20-26)

## வெளிநாட்டு...

10 இலட்சம் ரூபா பணமோசடி செய்த குற்றச்சாட்டில் மானிப்பாயைச் சேர்ந்த பெண்ணொருவரையும், 25 இலட்சம்ரூபா மோசடியில் ஈடுபட்ட குற்றச்சாட்டில் காத்தான்குடியைச் சேர்ந்தவரும் தற்போது களுத்துறையில் வசித்து வருபவருமான 22 வயதுடைய பெண்ணொருவரையும், 40 இலட்சம் மோசடி செய்த குற்றச்சாட்டில் யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த தெஹிவளையில் வசித்துவரும் ஆணொருவரையும் யாழ். மாவட்ட குற்ற விசேட விசாரணைப் பிரிவு பொறுப்பதிகாரி குணரோஜன் தலைமையிலான குழுவினர் கைதுசெய்து நீதிமன்றில் முற்படுத்தி விளக்கமறியலில் வைத்துள்ளனர். (அ-ஒ-26)

THE ROYAL COLLEGE OF JAFFNA
தனியார் கல்வி நிறுவனம் - சங்கானை.
3 மாதங்களில் இலக்கணப் பிழையின்றி
ஆங்கிலத்தில் சரளமாகக் கதைக்கப் பயில
By விக்னேஸ்வரன் ஆச்சார்யார்
(26 வருட அனுபவம்
மாதக்கட்டணம் 6000 /-
குபேரன் கட்டட மாடி, சங்கானை.
TeP: 077 675 1649
(CS/42867) N-1

வீடு வாடகைக்குண்டு
யாழ்.சண்டிலிப்பாய், கீரிமலை வீதியில்
பிரதேசசெயலகத்திற்கு அருகாமையில்
சகல வசதிகளுடன் கூடிய வீடு
வாடகைக்குண்டு. நிறுவனங்கள்
நடாத்துவதற்கு உகந்த இடம்.
077 757 1934 / 077 724 6647
(CS/55724) N-1

82ஆவது பிறந்தநாள் நினைவும்
10ஆவது ஆண்டு நினைவஞ்சலியும்



மலர்வு : 01.07.1942 உதிர்வு : 11.08.2014

அமரர்
# தவமணி தம்பிராசா

திதி: ஆடித்திங்கள் அபரபக்கபிரதமை

ஆண்டுகள் பத்து ஆனாலும் அன்னையே உங்கள்
அன்பின் அரவணைப்பு என்றும் எம்மனதை விட்டகலாது
எமது ஈரவிழிநீரால் உங்கள் பாதமலர் இறைஞ்சுகின்றோம்
உங்கள் நீங்காத நினைவு நிழல் என்றும் எம்மனதிலே
நிலைத்திருக்கும்....

ஓம் சந்தி! ஓம் சாந்தி !! ஓம் சாந்தி!!!

மஞ்சத்தடி,
இணுவில்.
077 645 8440

என்றும் உங்கள நினைவுடன் வாழும்
பிள்ளைகள், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள்.

## ஆதனப்பெயர்மாற்றம்

யாழ்ப்பாணம் மாநகரசபைக்குட்பட்ட வட்டாரம் - 24, ஆஸ்பத்திரி வீதி, 745 என்னும் வரிமதிப்பீட்டு இலக்கத்தைக் கொண்ட ஆதனம் E.E.நீக்கிலாப்பிள்ளை என ஆதனவரிப் பதிவேட்டில் பதியப்பட்டுள்ளது.

குறித்த ஆதனம் இல-205/3, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த இராஜேந்திரம் ராதாவும் பெண் தவராணியும் 29.06.2005ம் திகதியிட்டு பிரசித்த நொத்தாரிசு திருமதி சி.ஜெயசித்திரா முகதாவில் 119ம் இலக்க வெளிப்படுத்தல் உறுதி மூலம், தமது மாமன் மாமியாகிய கந்தையா கனகசபையும் பெண் இராசம்மாவும் 20.04.1983ம் ஆண்டு தமக்கு நன்கொடையாக வழங்கினார்கள் என்றும் குறித்த ஆதனமானது 1983ம் ஆண்டிற்கு முன்னரே அவர்களது 60 வருடங்களுக்கு மேற்பட்ட ஆட்சியுடையது என்றும், 20.04.1983ம் திகதியில் இருந்து தங்கள் இருவரின் ஆட்சியிலேயே இருந்து வருகின்றது எனவும் வெளிப்படுத்தியுள்ளனர்.

குறித்த ஆதனத்தை இல -205/3, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த இராஜேந்திரம் ராதாவும் பெண் தவராணியும் 26.10.2005ம் திகதியிட்டு பிரசித்த நொத்தாரிசு திருமதி ஜெயசித்திரா சிறிதரன் முகதாவில் 161ம் இலக்க நன்கொடை உறுதி மூலம் தமது மகளான இராஜேந்திரம் ராதா மகள் நளினிக்கு வழங்கியுள்ளனர்.

குறித்த ஆதனத்தை இல-205/3, ஆஸ்பத்திரி வீதியைச் சேர்ந்த இராஜேந்திரம் ராதா மகள் நளினி 05.05.2006ம் திகதியிட்டு பிரசித்த நொத்தாரிசு ரி.எம்.அந்தோனிப்பிள்ளை முகதாவில் 3037ம் இலக்க அறுதி உறுதி மூலம் இல-30, 02ம் குறுக்குவீதி, யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த கிறிஸ்ரி மகள் சிந்தியாவுக்கு வழங்கியுள்ளார்.

குறித்த ஆதனத்தை இல-368/5, பிரதான வீதி, யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த அட்சலிங்கம் பிரதீபனும் பெண் சிந்தியாவும் (முன்னர் கிறிஸ்ரி மகள் சிந்தியா) 01.06.2013ம் திகதியிட்டு பிரசித்த நொத்தாரிசு திருமதி சி.ஜெயசித்திரா முகதாவில் 1765ம் இலக்க அறுதி உறுதி மூலம் இல-205/3, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த இராசேந்திரம் ராதாவுக்கும் பெண் தவராணிக்கும் வழங்கியுள்ளனர்.

### ஆதன அட்டவணை

வடமாகாணம், யாழ்ப்பாணம், யாழ்ப்பாணப்பகுதி, சுண்டிக்குளி கோவிற்பற்று, சிவியாதெரு இறை, யாழ்ப்பாணம் பிரதேச செயலகப்பகுதியில், யாழ். மாநகரசபை எல்லைக்குட்பட்ட ஜே/74 கிராம சேவகர் பிரிவில் உள்ள "இளஞ்சிங்க ஆராட்சி வளவு" நிலப்பரப்பு பூச்சியம் குளி பதினாறரை (நி.பர.0குளி 16 ½). இதற்குள் அமைந்துள்ள வீடும் பயிர்வகைகளும். இதற்கு எல்லைகள்-

கிழக்கு :- கணபதி செல்வத்தின் ஆதனம்.
வடக்கு :- மரியான் ராசுவின் ஆதனம்.
மேற்கு :- ஒழுங்கை.
தெற்கு :- ஆஸ்பத்திரி வீதி இதடங்களும்.

தற்போது இராசேந்திரம் ராதாவும் பெண் தவராணியும் இவ்வாதனத்தைத் தமது பெயரிற்கு எமது பதிவேட்டில் பெயர்மாற்றம் செய்வதற்கு விண்ணப்பித்துள்ளனர். எனவே இவ்வாதனத்திற்கு உரிமைகோருபவர் யாராவது இருப்பின் பத்திரிகையில் பிரசுரித்த திகதியில் இருந்து ஒரு மாதத்திற்குள் உறுதிப்படுத்தப்பட ஆவணங்களுடன் எழுத்து மூலம் அறியத்தருமாறும், உரிமைகோராவிடத்து குறித்த ஆதனமானது இராஜேந்திரம் ராதாவும் பெண் தவராணியும் என்னும் பெயரிற்கு மாற்றம் செய்ய நடவடிக்கை எடுக்கப்படும் என்பதுடன் இந்த ஆதனப்பெயர்மாற்றம் செய்வதால் வரக்கூடிய எப்பொறுப்பிற்கும் யாழ்ப்பாண மாநகரசபை பொறுப்பாளி அல்ல என்பதையும் அறியத்தருகின்றேன்.

ஆணையாளர்,
யாழ். மாநகர சபை.

(CR.42852) (N-1)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஜனநாயகத் தமிழ்க் கூட்டணியின் தலைவர்கள் கலந்துரையாடல்

யாழ்ப்பாணம், ஜூலை 22

எதிர்வரும் ஜனாதிபதித் தேர்தலில் தமிழர் தரப்பிலிருந்து ஒரு பொதுவேட்பாளரை நிறுத்துவதற்கான உடன்படிக்கையொன்று இன்று திங்கட்கிழமை கைச்சாத்திடப்படவுள்ள நிலையில் ஜனநாயகத் தமிழ்த் தேசியக் கூட்டணியின் தலைவர்களுக்கிடையிலான கலந்துரையாடல் நேற்று ஞாயிற்றுக்கிழமை கந்த ரோடையில் அமைந்துள்ள புளொட் அமைப்பின் அலுவலகத்தில் நடைபெற்றது.

இந்தக் கலந்துரையாடலில் புளொட் அமைப்பின் தலைவரும் நாடாளுமன்ற உறுப்பினருமான த.சித்தார்த்தன், ரெலோ அமைப்பின் தலைவரும், நாடாளுமன்ற உறுப்பினருமான செல்வம் அடைக்கலநாதன், ஈழமக்கள் புரட்சிகர விடுதலை முன்னணியின் தலைவர் சுரேஸ் பிரேமச்சந்திரன், தமிழ்த்தேசியக் கட்சியின் தலைவர் சட்டத்தரணி என்.சிறீகாந்தா, ஜனநாயகப் போராளிகள் கட்சியின் தலைவர் வேந்தன் மற்றும் கட்சியின் பொதுச் செயலாளர் துளசி ஆகியோர் கலந்துகொண்டனர். (அ-ஒ-66)


## கேள்வி அறிவித்தல்
### சபைநிதி வேலைத்திட்டம் - 2024
### வலிகாமம் தென்மேற்கு பிரதேசசபை, மானிப்பாய்

01. தலைவர், பெறுகைக்குழு, வலிகாமம் தென்மேற்கு பிரதேச சபை, மானிப்பாய் அவர்களினால் தகுதிவாய்ந்த வழங்குநர்களிடமிருந்து அரக்கு முத்திரையிடப்பட்ட கேள்விகள் கீழ்க்காட்டப்பட்ட அட்டவணையில் விபரிக்கப்பட்ட வாறான கொள்வனவுக்கு கோரப்படுகின்றது.

02. தேசிய போட்டி கேள்வி கோரல் நடைமுறைக்கு அமைவாக கேள்வி கோரப்படுகின்றது.

03. கேள்வி பெறத் தகுதியுடையவராவதற்கு, வெற்றிபெறும் கேள்விதாரர் கறுப்புப் பட்டியலில் (Black List) சேர்த்துக் கொள்ளப்படாதவராகவும், பொருத்தமான வியாபார அல்லது கம்பனிப் பதிவுகளை கொண்டுள்ளவராகவும் இருத்தல் வேண்டும்.

04. ஆர்வமுள்ள கேள்விதாரர்கள் வலிகாமம் தென்மேற்கு பிரதேச சபை தலைமையலுவலகத்தில் (தொலைபேசி 021 225 5381) மேலதிக தகவல்களைப் பெற்றுக்கொள்ளலாம்.

05. ஆர்வமுள்ள கேள்விதாரர் பூரணமான கேள்வி ஆவணமொன்றை ஆங்கிலமொழியில் வலிகாமம் தென்மேற்கு பிரதேசசபை, மானிப்பாய் என்ற இடத்திலிருந்து 22.07.2024ம் திகதி தொடக்கம் 05.08.2024ம் திகதி வரை வேலை நாட்களில் 9.00 மணிக்கும் 15.00 மணிக்கும் இடையில் மீளளிக்கப்படாத கட்டணமாக ரூபா 2000.00 (வரி நீக்கலாக) செலுத்தி கேள்வி ஆவணங்களை பெற்றுக்கொள்ளலாம். இத்தொகை பணமாக செலுத்தப்படுதல் வேண்டும்.

06. பெறுகை ஆவணங்களினை இரு பிரதிகளில் தயாரித்து தனித்தனியாக இரு உறைகளில் இட்டு 06.08.2024ம் திகதி மு.ப 10.30 மணிக்கு முன்பதாக கிடைக்கக் கூடியவாறு **தலைவர், உள்ளூராட்சி அதிகாரசபை பெறுகைக்குழு, வலிகாமம் தென்மேற்கு பிரதேசசபை**, மானிப்பாய் எனும் முகவரிக்கு பதிவுத் தபாலில் அனுப்பிவைக்கப்படல் வேண்டும். அல்லது **அலுவலகத்திலுள்ள கேள்விப் பெட்டியினுள் நேரடியாக போடப்படுதல் வேண்டும்**. காலந்தாழ்த்தப்பட்ட கேள்வி நிராகரிக்கப்படும். கேள்வியானது கேள்விநேரம் முடிவடைந்தவுடன் வருகைதரும் கேள்விதாரர் அல்லது அவர்களின் பிரதிநிதிகள் முன்னிலையில் திறக்கப்படும்.

07. கேள்விப் பிணைவைப்புத் தொகையானது கீழே அட்டவணையிற் காட்டப்பட்டவாறு அமையும்.

| தொ. இல | விபரம் மற்றும் கேள்வி இல | தேவைப்படும் எண்ணிக்கை | பொருள் வழங்கப்பட வேண்டிய காலம் | கேள்விப் பிணை | |
|---|---|---|---|---|---|
| | | | | பிணைவைப்பு | செல்லுபடியாகும் காலம் |
| 01 | மேசை கணனி கொள்வனவு (Purchase of Desktop Computer) NP/14/41(16)/03/A5/COMP/2024/01 | 13 Nos | கொள்வனவு கட்டளை வழங்கிய திகதியில் இருந்து 30 நாட்கள் | 20,000.00 | 04.11.2024 |

**தலைவர்,**
**உள்ளூராட்சி அதிகாரசபை பெறுகைக்குழு,**
**வலிகாமம் தென்மேற்கு பிரதேசசபை, மானிப்பாய்.**
**22.07.2024.**

(cr42850)


## மரண அறிவித்தல்



### திருமதி றொஸ்லின் மேரி எலிசபெத் சத்தியேந்திரன்

**(ஓய்வுநிலை நவீல்ட் பாடசாலை, கைதடி-ஆசிரியை)**

மட்டக்களப்பு நாவற்குடாவினை பிறப்பிடமாகவும், இல.20 றக்கா லேன், சுண்டுக்குளி யாழ்ப்பாணத்தினை வதிவிடமாகவும் கொண்ட திருமதி. றொஸ்லின் மேரி எலிசபெத் சத்தியேந்திரன் அவர்கள் 20.07.2024 (சனிக்கிழமை) காலமானர்.

அன்னார் திரு.ஜெ.சத்தியேந்திரன் (ஓய்வு நிலை உதவிப்பிராந்திய முகாமையாளர் தென்னைப் பயிர்செய்கை சபை) அவர்களின் அன்பு மனைவியும், அமரர்களான அசரியா-ஹெப்சிபா தம்பதிகளின் அன்பு மகளும், ஜெகதீசசிங்கம்-ருக்குமணி தம்பதிகளின் அன்பு மருமகளும் அமரர் ஹிலீடா அசரியா, திருமதி பிபூவா ரொபின்சன், திரு. அம்புறூஸ் ஆகியோரின் அன்பு சகோதரியும், திரு. ஜெ.பவானத்தசிவம், திரு. ஜெ.புவனேந்திரன், திருமதி மனோரஞ்சிதம் பாலபரமேஸ்வரன், திரு ரொபின்சன் அவர்களின் மைத்துனியும், திருமதி கா.ஜெகரூபி, திருமதி Dr.பி.ஜெகமாலினி, திருமதி தீ.ஜெகசுதா, திருமதி ஜெ.ஜெகவனிதா, திருமதி Dr.தேவரஞ்சனா, திருமதி சு.யுஷாந்தி, திரு எட்வின், திருமதி E.டிலக்சினி ஆகியோரின் சிறியதாயும் ஆவார்.

அன்னாரின் இறுதி ஆராதனை இன்று (22.07.2024) திங்கட்கிழமை பிற்பகல் 2.00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் சென்ஜோன்ஸ் ஆலய சேமக்காலயில் நல்லடக்கத்திற்காக எடுத்துச் செல்லப்படும்.

இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.


**No. 20 றக்கா லேன்**
**சுண்டுக்குளி**
**யாழ்ப்பாணம்**

**தகவல்:**
**திரு ஜெ.சத்தியேந்திரன் (கணவர்)**
**077 505 6263**

(CS 987) V-1

## மரண அறிவித்தல்

தோற்றம் 26 . 11 . 1964



மறைவு 21 . 07 . 2024

### கணபதிப்பிள்ளை மகேஸ்வரன்

**(நூலக உதவியாளர், பொது நூலகம், நாவற்குழி)**

விடத்தற்பளையைப் பிறப்பிடமாகவும், சிங்கராஜ வீதி, நல்லூர் வடக்கு, கல்வியங்காட்டை வசிப்பிடமாகவும் கொண்ட கணபதிப்பிள்ளை மகேஸ்வரன் நேற்று (21.07.2024) ஞாயிற்றுக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான கணபதிப்பிள்ளை - புவனேஸ்வரி தம்பதியரின் அருமை மகனும், காலஞ்சென்றவர்களான தியாகராசா - சரஸ்வதி தம்பதியரின் மருமகனும், சுபத்திராவின் (ஓய்வுநிலை நூலகர் - பொது நூலகம், யாழ்ப்பாணம்) அன்புக் கணவரும், அபினயாவின் (யா/இந்து மகளிர் கல்லூரி) பாசமிகு தந்தையும், மாங்களேஸ்வரி (ஆசிரியர், யா/சன்மார்க்க வித்தியாலயம்), மைதிலி (யா/கல்வயல் ஸ்ரீ சண்முகானந்த வித்தியாலயம்), வேல்நம்பி, வாணிஸ்ரீ ஜனார்த்தனன் (கனடா), துவாரகா (ஜேர்மன்), காலஞ்சென்ற மயூரா ஆகியோரின் சகோதரனும், நந்தகுமார், ஈஸ்வரன், சுரேந்தினி (ஆசிரியர், மீசாலை விக்னேஸ்வரா மகா வித்தியாலயம்), சசிகலா, விக்னேஸ்வரன், சுமதி (வடமாகாண திட்டமிடல் பகுதி), சுதர்சன் (ஜேர்மன்), சசிகலா ஆகியோரின் மைத்துனனும், விஜான்சிகா, நித்திலன், சாருயா, அபிஷாந், லக்சியா, தேனுகா ஆகியோரின் மாமனாரும், லேனுஜா, அபிலாஸ், அஸ்வின், அஜினா, அயிசா ஆகியோரின் பெரியப்பாவும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (22.07.2024) திங்கட்கிழமை முற்பகல் 10.00 மணிக்கு அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைகளுக்காக செம்மணி இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும்.


இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளும்படி கேட்டுக்கொள்கின்றோம்.

**சிங்கராஜ வீதி,**
**நல்லூர் வடக்கு, கல்வியங்காடு.**
**077 101 6371**

**தகவல்:**
**குடும்பத்தினர்**

(CS 986) A-1

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



கொக்குவில் மேற்கு ஸ்ரீ சித்திவிநாயகர் ஆலயத்தின் குரோதி வருட மஹோற்சவத்தின் சப்பரத் திருவிழா, கடந்த வெள்ளிக்கிழமை நடைபெற்றது. (ப-66)






அச்சுவேலி, பத்தமேனி ஸ்ரீவட பத்திரகாளி அம்பாள் தேவஸ்தானத்தின் வருடாந்த மஹோற்சவத்தின் இரதோற்சவம் நேற்று முன்தினம் சனிக்கிழமை இடம்பெற்றது. (ப-18)

# விகாரை அகலும்வரை போராட்டம் ஓயாது!

யாழ்ப்பாணம், ஜூலை 22

தையிட்டி சட்டவிரோத விகாரைக்கு எதிரான போராட்டம் தற்போது இரண்டாவது ஆண்டாகத் தொடர்ந்தும் முன்னெடுக்கப்பட்டு வருகிறது. சட்டவிரோத விகாரை அகற்றப்பட்டுத் தமிழ்மக்களுக்குச் சொந்தமான காணிகள் அவர்களிடம் மீள ஒப்படைக்கப்படும் வரை எங்கள் போராட்டம் ஓயப்போவது கிடையாது என்பதை இலங்கை அரசுக்கும், சர்வதேசத்துக்கும் இந்தச் சந்தர்ப்பத்தில் உறுதிபடத் தெரிவித்துக் கொள்வதாகத் தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் ஊடகப் பேச்சாளர் க.சுகாஷ் தெரிவித்துள்ளார்.

"பலஸ்தீன மக்கள் தொடர்ந்தும் போராடிக் கொண்டிருப்பதால் அந்த நாடு தனிநாடென்ற அந்தஸ்தை நோக்கி நகர்ந்து கொண்டிருக்கின்றது. பலஸ்தீன மக்களின் போராட்டத்துக்குச் சற்றும் குறைவில்லாதது ஈழத் தமிழ்மக்களின் போராட்டம்" எனவும் அவர் குறிப்பிட்டார். (அ-ஒ-66)



கிளிநொச்சி முருகானந்தாக் கல்லூரியின் 2024 ஆம் ஆண்டுக்கான மாணவர் நாடாளுமன்ற அமர்வு கல்லூரியின் முதல்வர் அரசரட்ணம் பங்கையச்செல்வன் தலைமையில் கடந்த வெள்ளிக்கிழமை நடைபெற்றது. (ச-22,13)

## பரபரப்புக்கு...

சபாநாயகர் மஹிந்த யாப்பா அபேவர்த்தன தலைமையில் கூடவுள்ளது. (அ-ஒ-44)

## சட்டப்படி...

இரண்டு வாரங்கள் சட்டப்படி வேலை செய்யும் தொழிற்சங்க நடவடிக்கையை மேற்கொள்ளத் தீர்மானித்துள்ளதாக இலங்கை ஆசிரியர் சங்கத்தின் பொதுச் செயலாளர் ஜோசப் ஸ்டாலின் தெரிவித்துள்ளார்.

"இந்த இரண்டு வாரகாலப் பகுதியிலும் வலயக் கல்வி அலுவலகங்கள், மாகாணக் கல்வி அலுவலகங்கள், மாகாணக் கல்வி அமைச்சு, கல்வி அமைச்சு ஆகியவற்றால் நடத்தப்படும் செயலமர்வுகள், கூட்டங்கள், செயற்பாடுகள் எதிலும் நாங்கள் பங்குபெற மாட்டோம். இந்த இருவார காலப் பகுதியிலும் மாணவர்களுக்கான கற்பித்தல் கடமைகளில் மாத்திரமே நாங்கள் ஈடுபடுவோமே தவிர வேறு எந்தவொரு செயற்பாடுகளிலும் ஈடுபடமாட்டோம். எங்களுக்குச் சரியான தீர்வு கிடைக்கும் வரை நாங்கள் பல்வேறு வழிகளிலும் எமது போராட்டங்களை முன்னெடுப்போம்" - என்றார். (அ-ஒ-66)

## ஜனாதிபதித்...

தேர்தல் திகதி மற்றும் வேட்பு மனு ஏற்கப்படும் திகதி உள்ளிட்ட தகவல்கள் எதிர்வரும் 23 அல்லது 24 ஆம் திகதிகளில் அதிகாரபூர்வமாக அறிவிக்கப்படவுள்ளது. இதற்கான ஏற்பாடுகளை தேர்தல் ஆணைக்குழு முன்னெடுத்து வருகின்றது.

அதேவேளை தேர்தல் ஆணைக்குழு இன்று முதல் முக்கியமான சந்திப்புகளை நடத்தவுள்ளது. தேர்தல் பாதுகாப்பு, கண்காணிப்பு உட்பட பல்வேறு நடவடிக்கைகள் தொடர்பில் ஏற்கனவே கலந்துரையாடல்கள் இடம்பெற்றுள்ளன என்பது குறிப்பிடத்தக்கது. (அ-ஒ-44)

## விசேட....

குரிய திகதி அறிவிக்கப்படவுள்ளது எனத் தெரியவருகின்றது. மேற்படி சந்திப்பு 24 ஆம் திகதி தவிர்க்க முடியாத காரணத்தால் நடைபெறாவிட்டால் 25 ஆம் திகதி நிச்சயம் நடத்தப்படும் என்று தேர்தல்கள் ஆணைக்குழு உறுப்பினர் ஒருவர் தெரிவித்துள்ளார். (அ-ஒ-44)

## ரணில்...

தீர்மானம் நிறைவேற்றப்பட்டுள்ளது.

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தலைமையில் நடைபெற்ற மக்கள் சந்திப்பில் ஐக்கிய தேசியக் கட்சி முக்கியஸ்தர்களும், மொட்டுக் கட்சி முக்கியஸ்தர்களும் ஒரே மேடையில் அமர்ந்திருந்தனர். இக்கூட்டத்தில் உரையாற்றிய பொதுஜன பெரமுன கட்சியின் கம்பஹா மாவட்ட தலைவரான பிரசன்ன ரணதுங்க, ஜனாதிபதித் தேர்தலில் களமிறங்குமாறு ரணில் விக்கிரமசிங்கவுக்கு அழைப்பு விடுத்தார். அத்துடன், தேர்தலில் ரணில் விக்கிரமசிங்க போட்டியிட வேண்டுமென்ற யோசனையையும் முன்வைத்தார். இதற்கு கூட்டத்தில் பங்கேற்ற அனைவரும் கை உயர்த்தி ஆதரவு தெரிவித்தனர். இதன்பின்னர் தீர்மானம் நிறைவேற்றப்பட்டுவிட்டது, எனவே, ஜனாதிபதித் தேர்தலில் களமிறங்க வேண்டும் என பிரசன்ன ரணதுங்க குறிப்பிட்டார். (அ-ஒ-44)



யாழ்.சுழிபுரம், பெரியபுலோ அரசடி ஞானவைரவர் ஆலயத்தின் சங்காபிஷேக உற்சவம் கடந்த வெள்ளிக்கிழமை நடைபெற்றது. முல்லைத்தீவு குமிழமுனை பெரியதம்பிரான் ஆலயத்தில் இருந்து பெண்களும், சிறுவர்களும் பாற்செம்பினை தலையில் தாங்கியவாறு, சுழிபுரம் ஞானவைரவர் ஆலயத்தை வந்தடைந்து தமது நேர்த்திக் கடனை நிறைவேற்றினர். (ச-25, 20,27)




தேசிய சேமிப்பு வங்கி அச்சுவேலி கிளையால் தரம்–5 புலமைப்பரிசில் பரீட்சையில் சித்தியடைந்த மாணவர்களுக்கான கௌரவிப்பு நிகழ்வு யாழ்ப்பாணம் புனித தெரேசாள் மகளிர் கல்லூரியில் கடந்த வியாழக்கிழமை நடத்தப்பட்டது. (ப)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## தேர்தலுக்கான...

யாழ்ப்பாணத்தில் நேற்று நடைபெற்ற தமிழ் மக்கள் கூட்டணியின் முதலாவது தேசிய மாநாட்டில், முதன்மை விருந்தினராகக் கலந்துகொண்டு உரையாற்றும் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:-

**ஈழத் தமிழரின் பெருந்தோல்வி**

எமது அரசியல் உரிமையின் மீது போர் தொடுக்கும் சிங்கள - பௌத்த பேரினவாதத்தை, 'தமிழ்த்தேசியம்' என்னும் ஒரு குடையின் கீழ் நின்று கூட்டாக எதிர்க்கும் திராணியை உருவாக்குவதில் தான் ஈழத்தமிழினம் இன்று பெருந்தோல்வியைச் சந்தித்திருக்கிறது.

எட்டு தசாப்தங்கள் கடந்தும், நீர்த்துப் போகாத அரசியல் அபிலாசைகளைக் கொண்டிருக்கின்ற ஈழத்தமிழர்களின், அடிப்படை மற்றும் அரசியல் உரித்துகளை அங்கீகரித்து, அர்த்தமுள்ள அரசியல் அதிகாரப் பகிர்வின் மூலம் இனச் சமத்துவத்தை அங்கீகரிக்கின்ற, பொருளாதார சுபீட்சமுள்ள இலங்கையைக் கட்டியெழுப்புவதற்கு, இலங்கை அரசு தொடர்ந்தும் தவறி வருகிறது என்பதை பிராந்திய மற்றும் சர்வதேச அரசுகள் உணர்ந்துகொள்ளும் காலமும் நேரமும் நெருங்கி வந்திருப்பதை புரிந்து கொள்ளமுடிகிறது.

இத்தகையதோர் சாதகத்தன்மை மிக்க அரசியற் சூழமைவில் ஈழத்தமிழர்களின் குரலை, தமிழ்த்தேசியம் என்னும் இயங்குதளத்தில் நின்று கூட்டுக் குரலாக ஒருங்கிணைக்க வேண்டியது அவசியமானது.

**இனநலனுக்கான தலைமை**

தமிழ்த்தேசிய அரசியலில் குறுகிய மற்றும் நீண்ட கால இலக்குகளைத் தீர்மானித்தல், சர்வதேச உறவுகளை மெய்நிலையில் வலுப்படுத்தல், இளைய தலைமுறை அரசியலாளர்களை வலுப்படுத்தல், மக்களை அரசியல்மயப்படுத்தல், மக்களின் உணர்ச்சியையும் திரட்சியையும் ஒரு புள்ளியில் சந்திக்க வைத்தல் உள்ளிட்ட அரசியற் செல்நெறிகளை செயலுருப்பெறச் செய்ய வேண்டியுள்ளது. மேற்கூறிய அத்தனையையும், இனநலன் ஒன்றையே நோக்காகக் கொண்ட நல்ல தலைமைத்துவத்தால் மட்டுமே ஏற்படுத்தமுடியும். வினைத்திறனான தலைமைப் பண்புகளுக்குள் இவை அனைத்தும் அடங்கும். இப்போது நம் இனத்துக்கு இருக்கும் மிகப் பெரிய இடைவெளி ஆதர்சனத் தலைமையற்ற தன்மையே. சனத்திரட்சியை உருவாக்கக்கூடிய, ஜனவசியம் மிக்க, மிக நேர்த்தியான தலைமைத்துவத்தை யாராலும் சரியான முறையில் கொடுக்க முடியவில்லை அல்லது அத்தகைய அணுகுமுறைகள் குறித்து சிந்திக்கவில்லை. ஆனால் அதற்கான களச்சூழலை உருவாக்க வேண்டியது காலப் பெரும் பணியாக எம்முன் உள்ளதை நாம் உணரத் தலைப்படவேண்டும்.

**தலைமைக்கான சூழலை அழிக்கிறார்கள்**

நம் எதிரிகள் ஒரு காலத்தில் நம் தலைவர்களை அழித்தார்கள். இன்று தலைவர்கள் உருவாகுவதற்கான சூழலை அழிக்கின்றார்கள். பொது எதிரியை எதிர்கொள்வதற்காக எமக்குள் உள்ள எதிர்ப்புணர்வுகளை புறம்தள்ளி ஒரு பொதுவான அரசியல் இயக்கத்துக்குள் நாம் நிலமும் புலமுமாக இணைய வேண்டும். இந்தப் புள்ளியில் தான் யதார்த்தப் புறநிலைகளைப் புரிந்தவர்களாக, தனிப்பட்ட நலன்களை முன்னிறுத்தாது இன நலன்களை முன்னிறுத்தும் ஒரு கூட்டுத் தலைமையின் உருவாக்கம் குறித்தும், அத்தகைய நேர்கோட்டில் இயங்கும் ஒவ்வொரு கட்சிகளினதும் மரபார்ந்த தனித்துவங்களைப் பேணி ஒற்றுமைக்குள் வேற்றுமையும் வேற்றுமைக்குள் ஒற்றுமையும் காணுவது குறித்தும், கூட்டமைப்பை மீள உருவாக்குவது குறித்தும், அவ்வாறு மீளுருவாக்கம் பெறும் கூட்டமைப்பு என்பது தேர்தலுக்கான கூட்டமைப்பு என்பதைத் தாண்டி தேசத்துக்கான கூட்டமைப்பாக கட்டியெழுப்பப்பட வேண்டும் என்றும், அதற்கு தமிழ்த் தேசியத் தலைவர்கள் ஒவ்வொருவரும் ஒத்துழைக்க வேண்டும் எனவும் இந்த மாநாட்டின் ஊடாக நான் அழைப்பு விடுக்கிறேன்.

ஈழத்தமிழர்கள் எவ்வாறு கொள்கை வேறுபாடுகளோடும் அரசியல் சித்தாந்த வேறுபாடுகளோடும் திசைவேறாகப் பிரிந்திருக்கிறார்களோ அதேபோன்ற தொரு பிரிவினைகள் மிகுந்த நிலை தான் புலத்திலும் வேரோடியிருக்கிறது. விடுதலை வேண்டிப் பயணிக்கும் எங்கள் இனம், தன் இலக்கை அடைந்து கொள்ளும் எதிர்காலப் பயணங்களில் இதனால் பல்வேறு நெருக்குதல்களை எதிர்கொள்ள நேரிடும்.

**தேய்ந்து கொண்டிருக்கின்றோம்**

ஆழமாக நோக்கினால் ஈழத் தமிழ்த் தேசிய இனம் தொடர்ந்தும் தொடர்ந்தும் தன் வல்லமைகள் அத்தனையையும் இழந்து கொண்டேயிருக்கின்றது. மாறாக எதையும் பெறவில்லை. அது அரசியல் தீர்வாக இருக்கலாம். நிலைத்திருக்கத்தக்க அபிவிருத்தியாகவும் இருக்கலாம். கருதத்தக்க எதையும் சுதந்திரத்துக்குப் பின் எங்கள் இனம் பெறவேயில்லை.

இனத்தின் விடுதலை குறித்த சிந்தனைகள் வலுக்குன்றத் தொடங்கியிருக்கும் எங்களின் இரண்டாம் தலைமுறையினரிடத்தே, எங்கள் அறப்போர் குறித்த புரிதல்கள் குறுகியிருப்பதை அவதானிக்க முடிகிறது. ஒருவகையில் பார்த்தால் அரசியற் தெளிவும் கொள்கைப் பிடிப்பும் மிக்க இளையோரை வழிப்படுத்துகின்ற, அரசியல் நெறிப்படுத்துகின்ற சமூகப் பொறுப்பிலிருந்து நாம் தவறி வருகிறோம் என்பதை உணர முடிகிறது.

**புரிதல் இல்லை**

ஈழத்தமிழர்கள் எதிர்கொள்ளும் அடிப்படைப் பிரச்சினைகள் எவை என்ற கேள்வியை எங்கள் இளைய தலைமுறையை நோக்கி எழுப்பினால், நிலப்பறிப்பு, காணாமலாக்கப்பட்டோருக்கான நீதி, தமிழ் அரசியற் கைதிகளின் விடுதலை என்கின்ற மூன்று தளநிலைகளுமே அவர்களால் முன்னிலைப்படுத்தப்படுகின்றன. ஆனால் அந்த மூன்று பிரச்சினைகளும் இனவிடுதலைப் போருக்கான களத்தைத் திறக்கவில்லை என்கின்ற பொதுப் புரிதல் இன்று எங்களிடத்தே இல்லை. பலாலி விளிம்பு முதல் பொத்துவில் வரை தமிழர்களின் மரபுவழித் தாயகமாக எங்கள் வசமிருந்த போதே எங்கள் இனத்தின் அறப்போர் ஆரம்பித்திருந்தது என்பதையும், மேற்சொன்ன காரணங்கள் அந்தப் போர் சார்ந்து பின்வந்த நாட்களில் வலிந்து திணிக்கப்பட்ட துணைக்காரணங்கள் என்பதையும் உணரத் தலைப்பட்டால் தான், இனவிடுதலைப் போரின் அறநிலை சார் அடுத்த களங்களை உருவாக்கமுடியும்.

எமது சிந்தனைகளை மீள் வடிவமைப்புக்கு கொண்டுவருவதன் மூலம் காலத்தின் வேகத்துடனும், பூகோள மாற்றங்களுடனும் எமது மக்களின் அபிலாசைத் தளங்களிலிருந்து தடம்புரளாது பயணிக்க வேண்டியுள்ளது. இந்த நெருக்கடிமிக்க சூழலை எளிதாகக் கையாள்வதாயின், தமிழ்த் தேசியக் கட்சிகளின் தலைவர்களும், பிரதிநிதிகளும், புலத்திலிருந்தவாறு இனத்தின் விடுதலைக்காக அர்ப்பணிப்புடன் செயற்பட்டு வரும் உறவுகளும் ஒருங்குசேர தம் அரசியற் பயணத்தை முன்கொண்டு செல்வதற்கான எதிர்கால வழி வரைபடம் ஒன்றையும் அதுசார் கொள்கை வகுப்புகளையும் உருவாக்கவேண்டும்.

அத்தகையதோர் தளத்தில் நின்று எல்லாத் தரப்பினரையும் இணைத்துச் செயலாற்றுவதன் தேவையுணர்ந்த ஒருவனாக, அந்தத் தளத்தின் இணைப்புப்பாலமாக இருந்து என் எல்லா இயலுமைகளைக் கடந்தும் ஈழத்தமிழினத்தின் அரசியல் வேட்கையைச் சுமந்த பயணத்தின் பங்குதாரராக செயலாற்றுவதில் எனக்கிருக்கும் விருப்பையும், கடமையையும் நான் இவ்விடத்தில் வெளிப்படையாகவே பதிவுசெய்து நிறைவுசெய்கிறேன் - என்றார். (அ-ஒ-26-20)

## ஆலய...

ஊர்காவற்றுறை, புளியங்கூடல் இந்தன் முத்துவிநாயகர் கோவில் நகைகளைக் கொள்ளையிட்ட குற்றச்சாட்டில் 28 வயதான உதவிக் குருக்கள் ஒருவர் யாழ்ப்பாணம் மாவட்ட விசேட குற்றத் தடுப்புப் பிரிவுப் பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளார்.

ஆலயத்துக்குள் பாதுகாப்பாகப் பெட்டகத்தில் வைக்கப்பட்டிருந்த 62 பவுண் நகைகள் மற்றும் 8 இலட்சம் ரூபா பணம் என்பன காணாமல் போயிருந்தன. இது தொடர்பாக ஊர்காவற்றுறைப் பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்யப்பட்டிருந்தது.

ஆலயப் பெட்டகம் உடைக்கப்படாத நிலையில், போலிச் சாவிகளைகளைப் பயன்படுத்தி நகைகள், பணம் என்பன கொள்ளையிடப்பட்டிருக்கலாம் என்று சந்தேகிக்கப்பட்டது. இந்தநிலையில் குற்றவாளிகளை உடனடியாகக் கைது செய்யவேண்டும் என்று அந்தப் பிரதேச மக்கள் கவனவீர்ப்புப் போராட்டத்தையும் முன்னெடுத்திருந்தனர்.

விசாரணை இழுத்தடிப்புச் செய்யப்படுகின்றது என்ற மக்களின் குற்றச்சாட்டு, யாழ்ப்பாண மாவட்டப் பிரதிப் பொலிஸ்மா அதிபரான காளிங்க ஜெயசிங்கவின் கவனத்துக்குச் சென்றதை அடுத்து, இந்தச் சம்பவம் தொடர்பான விசாரணைகளை அவர், யாழ்ப்பாணம் மாவட்ட மூத்த பொலிஸ் அத்தியட்சகர் சூரிய பண்டாரவின் கீழ் இயங்கும் யாழ்ப்பாணம் மாவட்டக் குற்றத் தடுப்புப் பொலிஸ் பிரிவுக்கு மாற்றினார்.

அதன்பின்னர் யாழ்ப்பாணம் மாவட்டக் குற்றத் தடுப்பு பிரிவுப் பொறுப்பதிகாரி சமன் பிரேமதிலக வழிகாட்டலில் உப பொலிஸ் பரிசோதகர் பிரதீப் தலைமையிலான பொலிஸ் குழுவினரால் இந்தக் கொள்ளைச் சம்பவம் தொடர்பாக விசாரணைகள் ஆரம்பிக்கப்பட்டிருந்தன. விசாரணைகளின் அடிப்படையில் சந்தேகநபர் ஒருவர் நேற்றுக் கைது செய்யப்பட்டுள்ளார்.

கைது செய்யப்பட்டவர் 28 வயதுடைய குருக்கள் ஒருவராவார். அவர் ஆலயத் திருவிழாவின்போது உதவிக் குருக்களாகச் செயற்பட்டிருந்தார். சந்தேகநபரிடம் இருந்து 40 பவுண் நகைகள் மீட்கப்பட்டுள்ளன, ஏனைய நகைகள் வங்கியில் அடகு வைக்கப்பட்டுள்ளமை கண்டறியப்பட்டுள்ளது. அவையும் மீட்கப்படும் என்றும் பொலிஸார் தெரிவித்தனர். அதேவேளை, சந்தேநபர் கைது செய்யப்பட்டு, கோயில் நகைகள் கண்டுபிடிக்கப்பட்டதை அடுத்து பிரதேச மக்கள் அதை வெடி வெடித்துக் கொண்டாடியுள்ளனர். (அ-ஒ-26)

## சாவகச்சேரி...

தெரியவருகின்றது. சாவகச்சேரியில் நேற்று இடம்பெற்ற கூட்டத்தில் சமூக மட்ட அமைப்பினர் எனத் தம்மை அடையாளப்படுத்திய சிலர் சாவகச்சேரி ஆதார மருத்துவமனையிலுள்ள குறைபாடுகளை முன்வைத்தனர்.

முன்னாள் பதில் மருத்துவ பொறுப்பதிகாரி அர்ச்சுனா முன்வைத்த குற்றச்சாட்டுகள் உட்பட 16 குற்றச்சாட்டுகளை எழுத்துமூலம் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவிடம் வழங்கினர்.

ஒவ்வொரு குற்றச்சாட்டுத் தொடர்பாகவும் விவரமான கலந்துரையாடல் இடம்பெற்றது. அதில் உடனடியாக நிவர்த்தி செய்யப்படக்கூடிய பிரச்சினைகளை நிவர்த்தி செய்யுமாறு கூறிய அமைச்சர், தான் குறித்த துறைசார்ந்த அமைச்சர் இல்லை என்பதால் ஏனைய விடயங்கள் தொடர்பாக சுகாதாரத்துறை அமைச்சர் ரமேஷ் பத்திரண மற்றும் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க ஆகியோருடன் கலந்துரையாடி தீர்க்கமான ஒரு பதிலை வழங்குவதாகக் கூறினார்.

அத்துடன் 15 அங்கத்தவர்கள் உள்ளடங்கிய அபிவிருத்திக் குழு ஒன்று தெரிவு செய்யப்பட்டு மாதாந்தம் ஒரு கலந்துரையாடலை மருத்துவமனை நிர்வாகத்துடன் நடத்தவேண்டும் என கூட்டத்தில் தீர்மானிக்கப்பட்டது.

அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா தலைமையில் நடைபெற்ற இந்தக் கலந்துரையாடலில் வடக்கு மாகாண சுகாதார சேவைகள் பணிப்பாளர் மருத்துவர் பத்திரன, யாழ். பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் ஆ. கேதீஸ்வரன், சாவகச்சேரி ஆதார மருத்துவமனையின் பதில் மருத்துவ அத்தியட்சகர் மருத்துவர் ரஜீவ் ஆகியோர் பங்கேற்றனர். (அ-ஒ-20-27)

## 22 ஆவது...

அவர் மேலும் தெரிவித்ததாவது:-

22ஆவது திருத்தச்சட்டவரைவு நாடாளுமன்ற ஒழுங்குப் புத்தகத்தில் உள்ளடக்கப்படவில்லை. நாடாளுமன்ற கூட்டத் தொடருக்கான நிகழ்ச்சி நிரல் தயாரிக்கப்பட்டுள்ளது. அதில் 22 ஆவது திருத்தச் சட்டவரைவு இடம்பெறவில்லை.

இருக்கின்ற ஒரு சந்தேகத்தை நீக்கும் வகையிலேயே 22 ஆவது திருத்தச்சட்ட வரைவு முன்வைக்கப்பட்டுள்ளது. அதன்மூலம் தேர்தலுக்கு எவ்விதத் தாக்கமும் ஏற்படாது. அரசமைப்பு மற்றும் தேர்தல் சட்டம் பற்றி தெளிவில்லாதவர்களே வீண் அச்சத்தை ஏற்படுத்திவருகின்றனர் - என்றார். (அ-ஒ-44)

## மோதிரம்...

வயதானவர் அணிந்திருந்த தங்க மோதிரத்தை அபகரித்து தப்பிச் சென்றனர். இது தொடர்பில் மானிப்பாய் பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்யப்பட்டதற்கு அமைவாக, கோப்பாயில் வைத்து சந்தேகத்தில் இரு இளைஞர்கள் கைது செய்யப்பட்டதோடு அவர்களிடமிருந்து மோதிரமும் மீட்கப்பட்டுள்ளது. (அ-ஒ-125)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஒருபோதும் ரஷ்யாவை பிரிட்டன் தாக்காது

## பிரிட்டனின் புதிய அரசாங்கம் அறிவிப்பு

**லண்டன், ஜூலை 22**

**ரஷ்யாவின் இலக்குகளைப் பிரிட்டன் ஒருபோதும் தாக்காது என்று பிரிட்டனின் பாதுகாப்புச் செயலாளர் ஜோன் ஹேலி தெரிவித்துள்ளார்.**

ரஷ்யா - உக்ரைன் போரில், உக்ரைனுக்கு ஏராளமான இராணுவ உதவிகளை இதுவரையில் பிரிட்டனில் ஆட்சியமைத்திருந்த கென்சர்வேடிவ் கட்சி வழங்கியிருந்தது. தற்போது தொழிற்கட்சி அங்கு ஆட்சியமைத்துள்ள நிலையில், பிரிட்டனின் வெளிவிவகாரக் கொள்கைகள் மாறாது என்ற நம்பிக்கை தனக்கு இருப்பதாக உக்ரைனின் அதிபர் ஷெலன்ஸ்கி அண்மையில் தெரிவித்திருந்தார்.

இவ்வாறானதொரு பின்னணியிலேயே, ரஷ்யாவின் இலக்குகளை பிரிட்டன் ஒருபோதும் தாக்காது என்றும், அது உக்ரைனின் தனிப்பட்ட விடயம் எனவும் பிரிட்டனின் புதிய பாதுகாப்புச் செயலாளர் ஜோன் ஹேலி தெரிவித்துள்ளார்.

உக்ரைனுக்காக பிரிட்டன் வழங்கும் ஆயுதங்கள், உக்ரைனியர்களை ரஷ்யத் தாக்குதல்களில் இருந்து தற்காப்பதே. மற்றும்படி ரஷ்ய இலக்குகளைத் தாக்குமாறு ஊக்குவிப்பதோ, ரஷ்ய இலக்குகளைத் தாக்குவதோ பிரிட்டனின் கொள்கையல்ல. அதைச் செய்ய வேண்டிய எந்தத் தேவையும் பிரிட்டனுக்குத் தற்போது இல்லை என்றும் புதிய பாதுகாப்புச் செயலாளர் ஜோன் ஹேலி மேலும் தெரிவித்துள்ளார். (ம)

# ஹிஸ்புல்லா மீது இஸ்ரேல் தாக்குதல்

டெல்அவிவ், ஜூலை 22

லெபனான் மற்றும் ஏமன் நாடுகளில் உள்ள ஹிஸ்புல்லா அமைப்பின் தளங்கள் மீது தாக்குதல் நடத்தப்பட்டதாக இஸ்ரேல் அறிவித்துள்ளது. இஸ்ரேல் அண்மையில் நடத்திய வான் தாக்குதல்களில் ஹிஸ்புல்லா அமைப்பின் முக்கியமான தளபதிகள் கொல்லப்பட்டனர். இதற்குப் பதிலடியாக, லெபனானில் இருந்து இஸ்ரேலின் டெல் அவிவ் நகரத்தின் மீது ஹிஸ்புல்லா அமைப்பு மிகப்பெரும் தாக்குதலை நடத்தியது. இந்தத் தாக்குதலில் இஸ்ரேலுக்குக் கணிசமான சேதங்கள் ஏற்பட்டிருந்த நிலையிலேயே, இதற்குப் பதிலடியாக லெபனான் மற்றும் ஏமன் நாடுகளில் உள்ள ஹிஸ்புல்லா அமைப்பின் தளங்கள் மீது இஸ்ரேலால் தற்போது தாக்குதல் நடத்தப்பட்டுள்ளது. (ம)



# கமலா ஹரிஸ் களமிறங்கலாம்

வொஷிங்டன், ஜூலை 22

கொரோனாத் தொற்று காரணமாக அமெரிக்க ஜனாதிபதி ஜோ பைடன் தேர்தல் போட்டியிலிருந்து விலகும் பட்சத்தில் துணை ஜனாதிபதி கமலா ஹரிஸ் வேட்பாளராகக் களமிறங்கலாம் என சர்வதேச ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன.

அமெரிக்க ஜனாதிபதித் தேர்தலிலிருந்து ஜோ பைடன் விலக வேண்டும் என ஜனநாயகக் கட்சியின் உயர்மட்ட அதிகாரிகளான அமெரிக்க முன்னாள் ஜனாதிபதி பராக் ஒபாமா மற்றும் சபாநாயகர் ஆகியோர் விரும்புவதாகக் கூறப்படுகின்றது. (ச-இ)



# அமைதியை பரிசளிப்பேன்!

## ட்ரம்ப் தெரிவிப்பு

வொஷிங்டன், ஜூலை 22

உக்ரைன் - ரஷ்யா இடையிலான போர் முடிவுக்குக் கொண்டுவரப்படும் என்று அமெரிக்காவின் முன்னாள் அதிபரும், அதிபர் தேர்தலுக்கான வேட்பாளருமான ட்ரம்ப் தெரிவித்துள்ளார்.

ட்ரம்பும் ஷெலன்ஸ்கியும் நேற்றுமுன்தினம் தொலைபேசி வழியாகத் தொடர்புகொண்டு உரையாடியுள்ளனர். இதன்போதே, உக்ரைன் மற்றும் ரஷ்யா இடையிலான போரை முடித்துவைப்பேன் என்று ட்ரம்ப் தெரிவித்துள்ளார்.

அடுத்த அமெரிக்க ஜனாதிபதியாக, உலகத்துக்கு நான் அமைதியைக் கொண்டுவருவேன். பல உயிர்களைப் பலி வாங்கி, எண்ணற்ற குடும்பத்தினரைத் துன்பத்தில் ஆழ்த்திய போரை முடிவுக்கு கொண்டு வருவேன் என்று தனது எக்ஸ் பதிவில் ட்ரம்ப் குறிப்பிட்டுள்ளார். (ம)



# அம்பானி வீட்டுத் திருமணம் செலவிட்ட பணம் இரட்டிப்பு

சென்னை, ஜூலை 22

இந்தியாவின் முதல்தர பணக்காரரான முகேஸ் அம்பானி தனது மகன் ஆனந்த் அம்பானிக்கு கடந்தவாரம் திருமணம் செய்து வைத்த நிலையில், அதற்கான செலவிட்ட பணத்தைக் காட்டிலும், ஐந்து மடங்கான பணத்தைச் சம்பாதித்துள்ளார் என்று தெரிவிக்கப்படுகிறது.

தனது இளைய மகனின் திருமணத்தை அம்பானி குடும்பம் வெகுவிமரிசையாகவே நடத்தியது.

இதற்காக 5000 கோடி ரூபாவை அம்பானி செலவிட்டிருந்தார். இது இலங்கை மதிப்பில் 10ஆயிரம் கோடி ரூபாவாகும்.

இது அம்பானியின் மொத்தச் சொத்து விகிதத்தில் 0.5 சதவிகிதம் மாத்திரமேயாகும். இன்றைய நிலைவரப்படி முகேஸ் அம்பானியின் சொத்து மதிப்பு 121.2 பில்லியன் அமெரிக்க டொலராகும்.

அதாவது இலங்கையின் மதிப்பில் 36 இலட்சம் கோடி ரூபாவாகும். இந்தநிலையில் அண்மையில் வெளியான தகவலின் அடிப்படையில் முகேஸ் அம்பானியின் சொத்து மதிப்பில் சுமார் 25 ஆயிரம் கோடி ரூபா சேர்ந்துள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது. (ச-இ)



# பங்களாதேஷில் வெடித்தது கலவரம்!

## 107 பொதுமக்கள் சாவு

## ஊரடங்கு உத்தரவு அமுல்

டாக்கா, ஜூலை 22

பங்களாதேஷில் கொண்டுவரப்பட்டுள்ள வேலைவாய்ப்பு ஒதுக்கீட்டைக் கண்டித்து, நாடெங்கும் கலவரங்கள் வெடித்த நிலையில், தலைநகர் டாக்காவில் ஊரடங்கு உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது.

நாட்டின் அரச வேலைவாய்ப்புத் தொடர்பில், பங்களாதேஷ் அரசாங்கம் அண்மையில் பல்வேறு சீர்திருத்தங்களைக் கொண்டுவந்தது. இதன்படி, தேசத்தின் சுதந்திரத்துக்காகப் போராடியவர்களின் குடும்பங்களுக்கு 30 வீதமான அரசாங்க வேலைவாய்ப்பை ஒதுக்குவது என்று தீர்மானிக்கப்பட்டது. இதற்கு எதிராக மாணவர்களும், பட்டதாரிகளும், இளைஞர்களும் வீதிகளில் இறங்கிப் போராட்டங்களை மேற்கொண்டு வருகின்றனர்.

ஆரம்பத்தில் போராட்டங்களாகவும், பேரணிகளாகவும் இடம்பெற்ற இந்த எதிர்ப்பு நடவடிக்கைகள் பின்னர் கலவரங்களாக மாற்றம் பெற்றன. இந்தக் கலவரங்களால் 107 பேர் உயிரிழந்தனர். அரச திணைக்களங்களையும், அரச ஊடகங்களையும் கைப்பற்ற போராட்டக்காரர்கள் தீவிரமாக முயற்சித்ததையடுத்து போராட்டத்தைக் கட்டுப்படுத்துவதற்காக தலைநகர் டாக்காவில் ஊரடங்கு உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது. (ம)



இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிக்கேசன் (பிறைவேற்) லிமிட்டெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361 ஆம் இலக்கத்தில் உள்ள அவர்களது பணிமனையில் 22.07. 2024 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org